விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 மாசி 23 சனிக்கிழமை (07.03.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 078


SATS-TECH ENGINEERS
NEW PACKAGES & RENEWAL
CALL:- 222 5908 / 222 8812

# கொமாண்டோ படைப்பிரிவை அனுப்பி வன்னி மக்களை மீட்பது குறித்து ஆராய்வு

## அமெரிக்கா தெரிவிப்பு



(லண்டன்)

இலங்கையில் மோதல் பிரதேசங்களில் சிக்கியுள்ள மக்களின் நிலைமை குறித்து தெரிந்துகொண்டு, அங்கு அமெரிக்காவின் பசுபிக் கொமாண்டோ படைப்பிரிவை அனுப்பி அங்குள்ள மக்களை வெளியேற்றுவது தொடர்பாக ஆராய்வதற்கு சிலரை அனுப்பி உள்ளதாக அமெரிக்க அரசின் தெற்காசிய மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான துணைச் செயலாளர் ரிச்சட் பௌச்சர் தெரிவித்துள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)

## புதுமாத்தளன் பகுதியிலிருந்து யாழ்.வந்தவர்கள் மீது சூடு

### மூவர் பலி; மூவர் படுகாயம்

(பருத்தித்துறை)

புதுமாத்தாளன் பகுதியிலிருந்து யாழ் நோக்கி வந்தவர்கள் மீது கடலில் வைத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி சூட்டில் மூவர் உயிரிழந்துள்ளனர். மூவர் காயமடைந்துள்ளனர். சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது

புதுமாத்தளன் பகுதியிலிருந்து 13 பேர் படகு ஒன்றில் யாழ்ப்பாணம் நோக்கி புறப்பட்டு வந்துள்ளனர். அவர்கள் கடலில் வந்து கொண்டிருந்த வேளையில் துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இத் தாக்குதலில் சாவகச்சேரி கச்சாய் வீதியை சேர்ந்த ஜெராட் நிசாந்தநிலானி (வயது 26), மகாலிங்கம் பிரகாஸ்மோகன் (வயது 37), அவரின் மகன் பிரகாஸ்மோகன் அனுஷன் (வயது15) ஆகிய மூவரும் உயிர் இழந்துள்ளனர். (12ஆம் பக்கம் பார்க்க)

## காங்கேசன்துறை-திருமலை கப்பல் சேவை நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் இருந்து பிறமாவட்டத்திற்கு பிரயாணம் மேற்கொள்வதற்கான கப்பல் சேவை இன்று நடைபெறமாட்டாது எனவும் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் எனவும் அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

யாழ் மாவட்ட செயலகத்தில் பிரயாணத்தினை மேற்கொள்வதற்கு அனுமதிச் சீட்டினை பெற்றுக்கொண்டவர்கள் தமது அனுமதிச் சீட்டில் குறிப்பிட்டுள்ள திகதிக்கு மறுதினம் தமது பிரயாணத்தை மேற்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (சு)

## யுத்தப் பிரதேச மக்களின் அவலம் குறித்து ஐ.நா. அவதானம்

### ம.உ.ஆணையாளர் நவநீதம்பிள்ளை உரை



(லண்டன்)

யுத்தம் இடம்பெற்றுவரும் பிரதேசங்களில் பொது மக்கள் எதிர்நோக்கிவரும் அவலங்கள் குறித்து ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அதன் ஏனைய கிளை அமைப்புக்கள் உன்னிப்பாக அவதானித்து வருவதாக மனித உரிமைகளுக்கான ஆணையாளர் நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் தனது முதலாவது அறிக்கையை சமர்ப்பித்து உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் (12ஆம் பக்கம் பார்க்க)

## பூபாலசிங்கம் புத்தகசாலையின் உரிமையாளர் கொழும்பில் கைது

(கொழும்பு)

கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் இயங்கும் பிரபல புத்தக விற்பனை நிலையமான பூபாலசிங்கம் புத்தகசாலை உரிமையாளர் சிறீதரசிங் நேற்றுமுன்தினம் மாலை பயங்கரவாத தடுப்பு பொலிஸாரினால் கொழும்பில் கைது செய்யப்பட்டு கல்கிசை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் கொழும்பில் நடத்திய வான் தாக்குதல் தொடர்பான கட்டுரையும் அது தொடர்பான படங்களும் பிரசுரிக்கப்பட்டிருந்த ஆனந்த விகடன் வார இதழை விற்பனை செய்தமை (12ஆம் பக்கம் பார்க்க)

## புதன்,வியாழக்கிழமைகளில் இடம்பெற்ற ஷெல் தாக்குதலில் 83 பேர் உயிரிழப்பு

(திருகோணமலை)

வன்னியில் மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதல்களில் கடந்த 4,5ஆம் திகதிகளில் 83 பேர் உயிரிழந்துள்ளதுடன் 226 பேர் காயமடைந்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள இரணைப்பாலை,புதுக்குடியிருப்பு, முள்ளிவாய்க்கால்,மாத்தளன், அம்பலவன்பொக்கணை, வலைஞர்மடம் ஆகிய பகுதிகளில் வியாழக்கிழமை ஆட்லறி எறிகணை, பல்குழல் வெடிகணை,மோட்டார் மற்றும் பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இதில் 73 பேர் உயிரிழந்துள்ளதுடன் 164 பேர் காயமடைந்துள்ளனர். பாதுகாப்பு வலயம் என அறிவிக்கப்பட்ட மாத்தளன், அம்பலவன்பொக்கணை, வலைஞர்மடம் பகுதிகளில் நேற்று (12ஆம் பக்கம் பார்க்க)

காயமடைந்தவர்களின் விபரம் 02ஆம் பக்கத்தில்

## ஜெ.யின் உண்ணாவிரதம் 9 ஆம் திகதிக்கு மாற்றம்

ஜெயலலிதாவின் உண்ணாவிரதப் போராட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் உடனடி போர் நிறுத்தம் ஏற்பட நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியும் இலங்கைத் தமிழர்களுக்கு முழுமையான ஆதரவை வெளிப்படுத்துகின்ற வகையிலும் அ.தி.மு.க. சார்பில் 10 ஆம் திகதி நடைபெறுவதாக இருந்த உண்ணாவிரதப் போராட்டத்திற்கு பொலிஸார் அனுமதி மறுத்து விட்ட நிலையில் மேற்படி உண்ணவிரத அறப் போராட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு மாற்றப்பட்டுள்ளது என ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

இதேவேளை ஜெயலலிதாவின் உண்ணாவிரதப் போராட்டம் அரசியல் இலாபம் கருதி மேற்கொள்ளப்படுவதாக தி.மு.க குற்றஞ்சாட்டியுள்ளது. (ச-5,14)

## கொழும்புத் துறைமுகம் ஊடாக விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம்

### விசாரணை நடத்தவுள்ளது அரசு

(கொழும்பு)

வடக்கில் அண்மைக்காலமாக பல பாரிய ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன. அவை அனைத்தும் கொழும்பு துறைமுகத்தினூடாகவே பெறப்பட்டு அங்கு அனுப்பப்பட்டுள்ளன. அவை அனைத்தும் எவ்வாறு விடுதலைப் புலிகளைச் சென்றடைந்தன என்பது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

நேற்று தேசிய பாதுகாப்பு மத்திய நிலையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

இடம்பெயர்ந்து வரும் மக்கள் மனிக்பாம் போன்ற முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். சிறுவர்கள் சிலர் கல்வி இழந்துள்ளனர். அவர்களின் நலன்கருதி சிறிய அளவில் கல்வி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பல வெளிநாட்டு (12ஆம் பக்கம் பார்க்க)


சிறுவர்களை மீட்போம்
சிறுவர் ஆட்சேர்ப்பை நிறுத்து
போருக்கு சிறுவர்களை ஆட்சேர்ப்பது இலங்கை மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு முரணானது. இந்தப் பிரச்சினையில் இலங்கை அரசாங்கம் பூரண எதிர்ப்புக் கொள்கையைக் கடைப்பிடிக்கிறது.
புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதி செயலகம்
unicef

# வன்னியில் இடம்பெற்ற ஷெல் தாக்குதலில் காயமடைந்த பொதுமக்களின் விபரம்

(கொழும்பு)

வன்னிப்பகுதியில் கடந்த 4ஆம், 5ஆம் திகதிகளில் இடம் பெற்ற எறிகணைத்தாக்குதல்களில் காயமடைந்தோரின் ஒரு தொகுதியினரின் விபரங்கள் வெளியாகியுள்ளன.

**5ஆம் திகதி காயமடைந்தோர்**

லோகேஸ்வரி (வயது25), க.சுபாகர் (வயது 28), க.மணியம் (வயது 60), சு.முத்தையா (வயது52), ஜே.கலைவாணி (வயது 27), சி.தர்சினி (வயது31), ந.இராசாத்தி (வயது62), சு.அர்ச்சனா (வயது9), சு.கணபதி(வயது 67), ஆ.சந்திரகுமார் (வயது50), க.தங்கராஜா (வயது 53), செ.றோசினி (வயது26), வே.மகேந்திரன் (வயது31), அ.தீபராஜ் (வயது25), பு.சுகந்தினி (வயது26), அ.ஜீவரட்ணம் (வயது 50), பெ.ரவிச்சந்திரன் (வயது31), சி.றெபேகா (வயது 26), கை.ஞானசீலன் (வயது24), து.முருகையா (வயது31), ஜெ.மஞ்சுளா (வயது20), க.ரவிச்சந்திரன் (வயது 39), கோ.சுகந்தினி (வயது26), ஜே.சுரஸ்கோபி (வயது7),

த.லோறன்ஸ் (வயது 35), க.சிவபாக்கியம் (வயது 60), க. உதயநிர்மலா (வயது36), க.ஜசோதா (வயது21), பா.தர்சினி (வயது17), இ.பால சுப்பிரமணியம் (வயது 57), வி.சண்முகலிங்கம் (வயது69), ப.ராஜ்குமார் (வயது 20), இ.பார்த்தீபன் (வயது 17), து.முருகா (வயது 37), க.சத்தியமூர்த்தி (வயது 39), செ.நாகேந்திரன் (வயது 52), க.றஞ்சிதம் (வயது 50), செ.கோமதி (வயது 32), செ.ஜீசா (வயது 10), ஆ.ராஜ்குமார் (வயது 44), தி.சந்திரபாஸ் (வயது45), க.குமாரசாமி (வயது 63), கி.தனுசன் (வயது 14), மி.அசோக்குமார் (வயது19), ம.மேரிலிப்பிஸ் (வயது50), பா.இந்திரகாந்தி (வயது44), வா.கிருஸ்ணபிள்ளை (வயது 58), சி.புவேந்தினி (வயது12), சீ.நல்லதேவி (வயது55), ஜொ.ரவிந்திரவதனி (வயது47), அ.ஜோன் (வயது39), க.நாகராசா (வயது54), க.லிங்கேஸ்வரி (வயது 29), கே.கலைச்செல்வி (வயது26), மு.கலைரூபன் (வயது 24), க.மகேஸ்வரன் (வயது 38), க.நிருசா (வயது 25),சி.சீவரத்தினம் (வயது 50), தே.ஜீவலதா (வயது31), சி.சிவஞானம் (வயது50), க.குஞ்சுப்பிள்ளை (வயது 60), க.கேதீஸ்வரன் (வயது 30), சி.சிவகீதன் (வயது 23), சு.மாலினி (வயது 27), செ.விஜயகுமார் (வயது 44), வ.மரியாயி (வயது 50), அ.சண்முகதேவி (வயது 52), வே.கண்ணம்மா (வயது57),

சு.அருட்பிரகாசம் (வயது 56), ச.சுப்பையா (வயது 90), சு.தர்மலிங்கம் (வயது 38),சி.கோமதி (வயது 31),மா.செல்வநாயகம் (வயது 48),சி.பிரதீபன் (வயது22), இ.சுரோஸ் (வயது38), அ.அனுசாந்தகுமார் (வயது 29), ந.ஜங்கீதன் (வயது 16), பெ.நாகம்மா (வயது 34), இ.சிறிதா (வயது 2), இ.ரவீந்தினி (வயது 19), சி.தங்கராசா (வயது68), அ.பரஞ்ஜோதி (வயது30), ஜெ.நாவேந்தன் (வயது1), ஜெ.இராஜேஸ்வரி (வயது 19), பெ.ரஜனி (வயது 22), த.தஸ்வினி (வயது 19), த.தவப்பிரியா (வயது 12), செ.சுபிதா (வயது 13),

து.இந்திரதாஸ் (வயது 31), சி.கந்தசாமி (வயது 55), கு.விஜயரூபன் (வயது 41), து.திரேசம்மா (வயது 40), சி.மேரி (வயது 60), க.அகிலன் (வயது 34),க.மகேஸ்வரன் (வயது 38),கு.றெஜினா (வயது 57),க.சுபா சினி (வயது 25),பெ.சத்தியா (வயது15), சி.தெய்வானைப் பிள்ளை (வயது 62), செ.விஜயகுமார் (வயது 44), அ.மரியாயி (வயது 50), அ.சண்முகதேவி (வயது 52) ஏனையோரின் பெயர் விபரங்கள் வெளியிடப்படவில்லை.

**4ஆம் திகதி காயமடைந்தவர்கள்**

சி.புஸ்பராணி (வயது 35), த.ரகுராசா (வயது 20), செ.அருள்மதி (வயது 30), இ.கணேசன் (வயது 24), ப.வினாயகமூர்த்தி (வயது 30), ச.வள்ளிமயில் (வயது 50), மு.சுந்தராம்பாள் (வயது 68), கு.வேலு (வயது 60), ஜெ.சாரூபன் (வயது 03), தெய்வானை (வயது 63), பொ.அருந்தவமலர் (வயது53), செ.இராஜநாயகம் (வயது 57), கு.நடராசா (வயது 53),செ.ராதிகா (வயது16), செ.கணேசானந்தராசா (வயது 57), வ.சிவசுப்பிரமணியம், (வயது 72), சி.கந்தசாமி (வயது 49), கு.கபிலன் (வயது 25),நா.கிருஸ்ணன் (வயது60), த.சுரேஸ் (வயது 34), சு.அஜித்குமார் (வயது 12), ச.மிதுசன் (வயது 3 1/2), ச.லக்சுமி (வயது 22),பொ.நந்தகுமார் (வயது 32), ந.சந்திரவதனி (வயது 34), ந.விதுசா (வயது 04),

ந.வேணுசன் (வயது 04), ஏகாம்பரம் செல்வராசா (வயது 51), கு.சின்னப்பா (வயது 70), வி.செல்லக்குமாரி (வயது 33), க.மணியம் (வயது 32), சி.சுதர்சன் (வயது 20), ஜெ.கமலேஸ்வரி (வயது 49), சு.சர்வேஸ்வரன் (வயது 49), ர.நிரோஜன் (வயது 14), பொ.கமலநாதன் (வயது 52), கி.சிவலோகநாதன் (வயது 56), த.துவிசன் (வயது 07), த.லூட்ஸ்மெபோதா (வயது 27), இ.ஆறுமுகம் (வயது 59), யோ.நிசாந்தன் (வயது 13), சி.கௌரி (வயது 42), மூ.பிரதீபன் (வயது 18), க.ஜெயக்குமார் (வயது 38), செ.இராசநாயகம் (வயது 51), கர்ப்பிணியான பி.சிவதர்சினி (வயது 24), யே.சுரேஸ் (வயது 30), பி.புருசோத்தமன் (வயது14), பொ.துரைசிங்கம் (வயது 70), சி.ஜெயசீலன் (வயது 30), இ.அற்புதராசா (வயது 45), ஆ.அன்னப்பிள்ளை (வயது 85), க.மணியம் (வயது 52),அ.தெய்வானை (வயது 53), அ.ஜயன்பிள்ளை (வயது 65), வ.சாஜகான் (வயது 19), செ.ராதிகா (வயது 14), ஜெ.விஜிதா (வயது 30), ரா.சரஸ்வதி (வயது 57) ஏனையோரின் பெயர் விபரங்கள் வெளிவரவில்லை. (ச- 5)

## விளையாட்டு விழா

(கைதடி)

கைதடி நாவற்குழி தெற்கு ஸ்ரீ மகாவிஷ்ணு முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா ஸ்ரீ மகாவிஷ்ணு விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு முன்பள்ளியின் பெற்றோர் சங்கத் தலைவி ஜெ.தமிழ்ப்பிரியா தலைமையில் இடம் பெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.பாக்கியராசா கலந்து கொள்கிறார். (ஓ-21)

## கழுத்து வெட்டப்பட்டு ஒருவர் உயிரிழப்பு

கழுத்து வெட்டப்பட்டு படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் நேற்று உயிரிழந்தார். உரும்பிராயைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான இராசு வாமதேவன் (வயது56) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவர் நேற்று முன்தினம் இரவு புன்னாலைக்கட்டுவன் பகுதியில் வைத்து இனந்தெரியாதோரால் வெட்டப்பட்டதாகவும் நேற்றுக் காலை அவரை யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்தபோது அவர் அங்கு உயிரிழந்ததாகவும் கூறப்பட்டது. இது தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-5)

## ஏகாதசி விரத விசேட பூசை

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தானத்தில் இன்று ஏகாதசி விரத விசேட பூசைகள் இடம் பெறவுள்ளன.

இவ் விசேட பூசைகள் பிற்பகல் 3.30 மணிக்கு சங்கல்பத்துடன் ஆரம்பமாகி அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று தொடர்ந்து சுவாமி உள்வீதி வலம் வரும் நிகழ்வும் இடம் பெறவுள்ளன. (ஒ-4,36)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னையின் மடியில்
07-09-1938
வட்டு கிழக்கு, வட்டுக்கோட்டை.



அமரர்
**ஆர்.பி.வேலுப்பிள்ளை கருணானந்தன்**

ஆண்டவன் அடியில்
05-02-2009
(லண்டன்)

### தம்பியின் உள்ளத்திலிருந்து .....

முப்பத்தியொரு நாட்கள் சென்றாலும்
பாசப்பிணைப்பு எங்களை விட்டுச் செல்லவில்லை
காலதேவன் தங்களை கவர்ந்து சென்றாலும்
உங்கள் நினைவை எம்மால் மறக்க இயலாது
கொடையின் இலக்கணமாய் வாழ்ந்தீரே
இன்று இல்லையே எங்கள் ஒளிவிளக்கு
அண்ணன் என்ற சொல்லிற்கே அர்த்தம் நீர்தான்
உம்பிரிவு எங்களை துன்பச் சக்கரத்தில் தோயவைத்துவிட்டது
கண்ணீர் விட்டு அழுகின்றோம் நீர் எங்கு சென்றீரண்ணை
கடைசியில் முகம்காணா பாவியாகி நிற்கின்றோம்
உம் ஆத்மா என்றென்றும் இறைவனடியில் வாழ
எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி சாந்தி சாந்தி....

### நன்றி நவிலல்

அன்னாரது இழந்த துயரத்தில் எம்முடன் பங்கு கொண்டு ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்

அன்புத்தம்பி
சர்வானந்தன் குடும்பத்தினர்
சங்கரத்தைசந்தி, வட்டுக்கோட்டை.

### கருணை என்ற பெயருக்கே இலக்கணமாய்....

கருணை என்ற பெயருக்கே இலக்கணமாய்
வாழ்ந்த எம் பெரியப்பாவை
காலன் கவர்ந்து சென்றது விதியின் விளையாட்டல்லவோ
உம் குடும்பத்துக்காக ஏணியாக நின்றது மட்டு மல்லாமல்
மெழுகுதிரியாய் உருகி உம் வாழ்க்கையை
அர்ப்பணித்த உயர்ந்த மனிதரே
வாழ்க்கையில் அனாதை சிறார்களுக்கு
நீர்அளித்த உதவிகளின்றி
இன்று உம்பிரிவால் அவர்கள் வாடி நிற்கின்றார்கள்
பேர்த்தியை காணவர இருந்த உங்களைக்
காலன் வரவிடாமல் தடுத்து விட்டானோ
எம் பெரியப்பாவின் ஆத்மா இறைவனடியில் வாழ
எல்லாம்வல்ல பத்திரகாளி அம்மனை வேண்டி நிற்கின்றோம்
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

அன்புடன்
வைஷ்ணவி
(பெறாமகள்)

G. சிறீவரதன்
அபிவிருத்தி முகாமையாளர்
யூனியன் அஷ்யூரன்ஸ்
யாழ்ப்பாணம்

சிறிநவி
(பேர்த்தி)

# இன்று ஒரு தகவல்

## ஆணவக்குரங்கு

காட்டு வழியால் புத்தர் போய்க்கொண்டிருந்தார். அவருக்குப் பின்னால் அவரைப் பின் தொடர்ந்து ஒரு குரங்கு சென்று கொண்டிருந்தது.

புத்தர் திரும்பிப் பார்த்தார்.

குரங்கு அப்படியே குதித்து உயர எழும்பி ஒரு கிளையில் போய் உட்கார்ந்தது.

"ஏன் இப்படிச் செய்கிறாய்?" என்று கேட்டார் புத்தர்.

"என்னை சாதாரணமாக நினைக்க வேண்டாம். நான் மகாமந்தி என்னால் முடியாதது ஒன்றுமில்லை. என்ன வேண்டுமானாலும் செய்வேன்" என்றது.

"அப்படியானால் ஒரு பந்தயம் வைத்துக் கொள்ளலாமா?" என்றார்.

"ஓ... வைத்துக் கொள்ளலாம்!" என்றது.

"வேறொன்றுமில்லை. இப்பொழுது நீ மேலே எழும்பி அந்தக் கிளையில் உட்கார்ந்தது போல், அங்கிருந்து தாவி என் உள்ளங்கையில் வந்து உட்கார வேண்டும் அவ்வளவு தான்!" என்றார்.

"அப்படி உட்கார்ந்தால் என்ன பரிசு?" என்றது.

"சொர்க்கத்தில் இருக்கும் மாமன்னன் மரகதச் சக்கரவர்த்தியை என்னுடன் வந்து இருக்கும்படி அழைத்துக் கொள்கிறேன். அந்தச் சமயத்தில் அவருடைய அரியணை அங்கே காலியாகி விடும். நீ அதில் போய் உட்காரலாம்.

பந்தயத்தில் தோற்று விட்டால் பூமியில் வாழ்ந்து அதன் பின்னர் தான் என்னிடம் வரமுடியும்" என்றார்.

குரங்குக்குத் தாவுவது ஒரு பெரிய காரியமா? "இது எனக்கு சாதாரண விடயம். இப்பொழுதே தாவட்டுமா?" என்றது.

"சரி" என்று சொல்லி உள்ளங்கையை நீட்டினார். அவருடைய கை தாமரை இலை அளவுக்கு விரிந்தது.

குரங்கு தாவுவதற்கு தயாரானது. அதற்கு முன்னர் ஒரு சின்ன யோசனை.

"இந்தக் கிளையிலிருந்து அந்தக் கைக்குத் தாவுவது எனக்கு அற்பமான வேலை. என்னுடைய கௌரவத்திற்கு இது சரியாக இருக்காது. அதனால் இந்தக் கிளையிலிருந்து மேலுலகம் போய் அங்கே ஒரு சுற்றுச் சுற்றி விட்டு அங்கிருந்து வரலாம்!" என நினைத்தது.

பின் இதோ பாய்கிறேன் என்று தாவி உயரப் போய் விட்டது. சிறிது நேரத்தில் வானுலகத்திற்கு சென்றது. அங்கே ஐந்து பளிங்குத் தூண்கள். இளஞ் சிவப்பு நிறத்தில் இருந்தது.

குரங்கு நினைத்தது... புத்தரிடம் போய் இந்தப் பளிங்குத் தூண்களைப் பார்த்தேன் என்று சொன்னால் திகைத்து விடுவார். இந்தத் தூண்களில் ஏதாவது அடையாளம் போட்டு விட்டுப் போக வேண்டும் என்று நினைத்தது.

உடனே ஒரு தூணில் "ஒரு மகாஞானி வந்துவிட்டுப் போனார்" என்று எழுதியது. எழுதிவிட்டு அப்படியே தாவி புத்தரின் உள்ளங்கையில் வந்து உட்கார்ந்தது!

"பார்த்தீர்களா... வானுலகத்திற்கு போய் அங்கிருக்கும் ஐந்து பளிங்குத் தூண்கலைப் பார்த்துவிட்டு அதில் நான் வந்த விபரத்தை எழுதி வைத்து விட்டு வந்திருக்கிறேன்" என்றது.

"அப்படியா?" என்றார் புத்தர்.

"ஆமாம்... சந்தேகமாக இருந்தால் வாருங்கள் அழைத்துப் போய்க் காட்டுகிறேன்!" என்றது குரங்கு.

"அதற்கு அவசியமில்லை... கொஞ்சம் கீழே குனிந்து பார்" என்றார் புத்தர்.

அங்கே புத்தரின் உள்ளங்கை தெரிந்தது. நன்றாக உற்றுப் பார்த்தது. அவருடைய ஒரு விரலில் அது எழுதிய வாசகம் தெரிந்தது!

"அப்படியானால் வானத்தில் நான் பார்த்தது புத்தரின் விரல்களா?" என்று திகைத்தது குரங்கு.

இதைப் புரிந்து கொண்டவுடன் அந்தக் குரங்கின் கர்வம் அழிந்தது!

நம்முடைய மனம் தான் இந்தக்குரங்கு. 'மனம்' என்பதும் 'ஆணவம்' என்பதும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள். மனம் உள்ளவரை ஆணவம் இருக்கும். மனம் அழிந்தால் தான் ஆணவம் அழியும். மனம் அழிய வேண்டும் என்று பெரியவர்கள் சொல்வது இவ் அர்த்தத்தில்தான்!

ஒருவன் வாய்க்காலைத் தாண்டுகிறேன் என்று பந்தயம் கட்டி... தாண்ட முடியாமல் வாய்க்காலில் விழுந்து காலை உடைத்து கட்டுப் போட்டுக் கொண்டு வந்தான்.

"ஏன் இப்படி?" என்று கேட்டார்கள்.

"நான் பந்தயம் கட்டிய நேரம் சரியில்லை" என்றான்.

"எப்படி?" என்றார்கள்.

"வாய்க்காலில் தண்ணி இருக்கும் நேரமாக பார்த்து பந்தயம் கட்டியிருக்க வேண்டும்" என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# ஜனவரி முதல் மூன்று மாதத்திற்கான சமுர்த்தி உணவுப்பொருள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

சமுர்த்தி பயனாளிகளிற்கான 2009 ஆண்டு ஜனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் ஆகிய மூன்று மாதத்திற்கான உணவுப்பொருள் விநியோகம் ப.நோ.கூ.சங்கங்கள் ஊடாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் க. கணேஷ் அறிவித்துள்ளார்.

இதற்கமைவாக ஜனவரி முதல் மூன்று மாதத்திற்குமான ஆயிரத்து 15 ரூபாய் பெறுமதியுள்ள முத்திரை பெற்ற பயனாளிகளிற்கு 50 வீத அதிகரிப்புடன் கூடிய ஆயிரத்து 500 ரூபாய் பெறுமதியான முத்திரைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் உணவுப் பொருட்களை கொழும்பிலிருந்து கொண்டு வருவதற்கு வழங்கப்படும் கிலோ ஒன்றிற்கான கப்பல் கட்டண கூலி 7 ரூபாய் மாவட்ட செயலகத்தால் பொறுப்பேற்கப்பட்டுள்ளதால் சமுர்த்தி பயனாளிகளின் பொருட்கள் வழமையை விட குறைந்த விலையில் வழங்கப்படுவதாகவும் யாழ் அரச அதிபர் க. கணேஷ் தெரிவித்தார்.

| மூன்று மாதத்திற்குரிய உணவுப் பொருட்கள் | விலை | முத்திரை பெறும் விபரம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1500/= | 900/= | 525/= | 375/= | 615/= | 350/= | 250/= |
| அரிசி (Kg) | 72/= | 23.80 | 15.15 | 11.35 | 8.80 | 10.85 | 8.65 | 6.25 |
| மா (Kg) | 64/= | 17.0 | 10.0 | 7.0 | 5.0 | 6.0 | 4.0 | 2.0 |
| சீனி (Kg) | 73/= | 5.0 | 3.0 | 2.0 | 1.0 | 2.0 | 1.0 | 1.0 |
| பருப்பு (Kg) | 133/= | 2.0 | 1.0 | 1.0 | 0.5 | 0.5 | 0.5 | 0.5 |

அட்டவணையில் குறிப்பிட்ட அளவுப் பிரமாணத்தில் 3 மாதத்திற்குரிய உணவுப் பொருட்கள் சேர்த்து வழங்கப்படவுள்ளதாகவும் யாழ். அரச அதிபர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-5)

# சட்டவிரோத மதுபான உற்பத்தி தொடர்பில் ஒரு கோடியே 8 இலட்சம் ரூபா தண்டம் அறவீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் சட்டவிரோத மதுபான உற்பத்தி தொடர்பாக கடந்த ஆண்டில் ஒருகோடியே 8 இலட்சத்து 69 ஆயிரத்து 859 ரூபா மாவட்ட நீதிமன்றங்களினால் அறவிடப்பட்டுள்ளது. யாழ். மதுவரி திணைக்களத்தினால் கடந்த ஆண்டு சட்டவிரோத மதுபானம் தொடர்பில் 944 வழக்குகள் நீதிமன்றில் தொடரப்பட்டுள்ளது.

இதன்படி சங்கானை 177 வழக்குகளில் 15 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாவும், மல்லாகம் 253 வழக்குகளில் 28 இலட்சத்து 26 ஆயிரம் ரூபாகவும், பருத்தித்துறையில் 161 வழக்கில் 32 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாவும், யாழ்ப்பாணத்தில் 353 வழக்கில் 32 இலட்சத்து 850 ரூபாவும் அறவிடப்பட்டுள்ளது.

இந்த வருட இரண்டு மாதத்தில் 132 வழக்குகள் தொடரப்பட்டு 23 இலட்சத்து 72 ஆயிரத்து 400 ரூபா மாவட்ட நீதிமன்றங்களினால் அறவிடப்பட்டுள்ளது. ஜனவரி மாதத்தில் யாழ்ப்பாணத்தில் 11 வழக்கில் ஒரு இலட்சத்து 81 ஆயிரத்து 900 ரூபாவும், பருத்துத்துறையில் 6 வழக்கில் 5 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாவும், சங் கானை 12 வழக்கில் 1 இலட்சத்து 49 ஆயிரம் ரூபாவும், பெப்ரவரி மாதத்தில் யாழ்ப்பாணத்தில் 32 வழக்கில் 4 இலட்சத்து 13 ஆயிரம் ரூபாவும், பருத்தித்துறையில் 29 வழக்கில் 9 இலட்சத்து 52 ஆயிரம் ரூபா, சங்கானை 35 வழக்கில் 66 ஆயிரத்து 500 ரூபாவும், மல்லாகம் 7 வழக்கில் 65 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் அறவிடப்பட்டுள்ளது.

இதேவேளை பொலிஸ் நிலையங்களாலும் 147 வழக்குகள் தொடரப்பட்டுள்ளதாக அரசாங்க அதிபருக்கு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் தெரிவித்துள்ளார். இதன்படி யாழ்ப்பாணத்தில் 23, மானிப்பாய் 14, சுன்னாகம் 43, சாவகச்சேரி 19, கோப்பாய் 21, நெடுந்தீவு 1, வட்டுக்கோட்டை 22 வழக்குகள் தொடரப்பட்டு தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளன. ஓ-7

## இராசி பலன்

07.03.2009

(மாசி 23, சனிக்கிழமை)

ஏகாதசி பிற்பகல் 4.00 மணிவரை

புனர்பூசம் பிற்பகல் 1.08 மணிவரை

இராகுகாலம் 9.24-10.54 மணிவரை

சுபநேரம் 3.24-4.54 மணிவரை

ஏகாதசி விரதம்

| | |
|---|---|
| மேடம் | கல்வியில் ஆர்வம், ரோகநிலை, அற்பர் உறவு, முயற்சி தாமதம். |
| இடபம் | இனிய அனுபவம், அந்நியர் சந்திப்பு, வாக்குமேன்மை, தன வருவாய். |
| மிதுனம் | கௌரவக்குறைவு, பொருள் விரயம், குடும்பக் கவலை, எடுத்த காரியம் தாமதமாகும். |
| கடகம் | நண்பர்கள் உதவி, ஆழ்ந்த சிந்தை, சயன சுகம், புதிய முயற்சி. |
| சிங்கம் | தந்தை வழி உறவு, கோபப்படுதல், பிரயாணம், காரிய தாமதம். |
| கன்னி | தொழில்நன்மை, மனமகிழ்ச்சி, காரிய சித்தி, பொருள் சேர்க்கை. |
| துலாம் | நண்பர்கள் உதவி, காரியசித்தி, மேன்மை, ஆரோக்கிய நிலை. |
| விருச்சிகம் | புதிய திட்டமிடல், பிதாசிந்தை, கட்டுப்பாடு, பணவிரயம். |
| தனுசு | ஆரோக்கியக்குறைவு, காரிய தடங்கல், மனக்கவலை, பிரயாண பயம். |
| மகரம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, காரிய நன்மை, நல்ல செய்தி, பிரயாண நன்மை. |
| கும்பம் | முயற்சி கைகூடும், போசன சுகம், அதிகாரம், பகைவர் நேசம். |
| மீனம் | மனக்கவலை, கடின முயற்சி, தனவிரயம், பிரயாணம். |

வளவன்

# ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை ஆகஸ்ட் 16 ஆம் திகதி

பாடசாலைகளுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாக 5 ஆம் தர மாணவர்களுக்கு நடத்தப்படும் புலமைப் பரிசில் பரீட்சைக்காண விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதியன்று 10 இலிருந்து 11 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும் எனவும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட்ட வேண்டும் எனவும் பரீட்சை ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

இரட்டை வகுப்பேற்றம் பெற்ற பிள்ளைகளுக்கு அதிபர் உறுதிப்படுத்தினால் 10 வயதிற்கு கூடுதலாக இருக்க வேண்டும். என்ற நிபந்தனை கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

மேலும் பரீட்சார்த்தி உதவிப் பணம் பெற விரும்பினால் பெற்றோர் அல்லது சட்ட ரீதியான பாதுகாவலர் எல்லா விதமான மார்க்கங்களில் இருந்தும் வருடத்திற்கு ரூபா 54 ஆயிரம் அல்லது அதற்கு குறைவான வருமானத்தைப் பெறுபவராக இருக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சை நாடளாவிய ரீதியில் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி நடைபெறவுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது. (ஓ)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் நடத்தும் தகவல் தொழில்நுட்பவியல் போட்டிப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டத்திலுள்ள க.பொ.த. உயர்தர வகுப்புக்களைக் கொண்ட அனைத்துப் பாடசாலைகளிலும் தகவல் தொழில் நுட்பவியல் தொடர்பான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை 9 மணி முதல் 10.30 வரை நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட மேலதிக கல்விப் பணிப்பாளர் ஊடாக ஒழுங்கு செய்யப்பட்டு வலயக்கல்விப் பணிப்பாளர்கள் உதவியுடன் நடத்தப்படும் இப்பரீட்சைக்கு க.பொ.த. உயர்தரம் 2010 இல் கல்வி பயிலும் அனைத்து மாணவர்களும் தோற்றவுள்ளனர்.

இப்பரீட்சையானது தகவல் தொழில்நுட்பம் சார்ந்த தேவைகளுள்ள பாடசாலைகளை இனங்கண்டு அவற்றை மேம்படுத்தும் செயற்றிட்டங்களை வகுக்க உதவும் என யாழ்ப்பாண விஞ்ஞான சங்க செயலாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சிறந்த பெறுபேறுகளை பெறும் மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (ஓ-6)

# சர்வதேச மகளிர் தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் சர்வதேச மகளிர் தினம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் பணிப் பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் தலை மையில் நடைபெறவுள்ளது. இவ் விழாவில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேத நாயகம் கலந்து சிறப்பிப்பதுடன், சிறப்பு விருந்தினர்களாக யாழ் அரசசார்பற்ற நிறுவ னங்களின் இணையத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், இளைப்பாறிய நீதிபதி சரோஜினி இளங்கோவன், உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் சிராணி மில்ஸ், யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ப.கிரிதரன், யாழ். வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி கமலேஸ்வரி பொன்னம்பலம், சட்டத்தரணி மு.றெமிடியஸ் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்துவார்கள்.

விழாவில் கலை நிகழ்வுகளாக யாழ் வேம்படி மகளிர் கல்லூரியினர் வழங்கும் நடன நாடகம், மாரீசன்கூடல் கிராம முன் னேற்றச் சங்கத்தினரின் ''பெண்களின் உரிமையைத் தட்டிப்பறிக்கும் சமுதாயம்'' என்னும் நாடகம், யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் வழங்கும் ''அபிநய நடனம்'' ,வேம்படி மகளிர் கல்லூரி மாணவி களின் ''புதுயுகம் படைப்போம்'' நாடகம் , சாவகச்சேரி மாதர் அபிவிருத்திச் சங்கம் வழங்கும் ''மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையை ஒழிப்போம்'' நாடகம், இளவாலை கிராம மகளிர் அபிவிருத்திச் சங்கத்தினரின் ''ஏழ்மையின் மகிமை'' நாடகம் ஆகியன இடம் பெறவுள்ளன.விழாவில் கண்காட்சியும் விற்பனைகளும் இடம்பெறவுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ஓ-134)

## கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 2 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக திரு நெல்வேலி மக்கள் வங்கி முகாமையாளர் நா. நாகேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ.எப். ஜே. ரூபசிங்கம், திருநெல்வேலி இலங்கை வங்கி முகாமையாளர் க. பிறேமராஜன், கௌரவ விருந்தினராக யாழ். இந்துக்கல் லூரி அதிபர் பி. கணேசராசா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஓ-7)




வலிகாமம் கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினரால் வசாவிளான் சுதந்திரபுரம் நலன்புரி நிலைய பாரதி பொதுமண்டபத்தில் நடத்தப்பட்ட பெற்றோர்கள், பிள்ளை களுக்கான கல்வி விழிப்புணர்வு செயற்றிட்டம் நிகழ்வில் வலிகாமம் வலய முறைசாராக் கல்வி செயற்றிட்ட அலுவலர் ந.சண்முகராஜா உரையாற்றுவதையும், தெல்லிப்பளை பிரதேச செயலர் சு.முரளிதரன், குட்டியப்புலம் அ.த.க. பாடசாலை அதிபர் எஸ்.கந்தசாமி, வலிகாமம் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.நாகராஜா, கிராம அலுவலர் எஸ்.கலியுகவரதன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

## மாணவர்களின் இடைவிலகலை கண்காணிக்க நடவடிக்கை

கோண்டாவில் பகுதிகளில் பாடசாலையில் இருந்து இடை விலகும் மாணவர்களின் தொகை அதிகரித்து வருகின்றது. குடும்பப் பின்னணி, மாணவர்களின் ஆர்வமின்மை போன்ற காரணங்களால் மாணவர்களின் இடை விலகல் அதிகரித்துள்ளது.

இது தொடர்பாக நல்லூர் பிரதேச செயலக சிறுவர் பகுதியினர் தெரிவிக்கையில், இடை விலகும் மாணவர்களின் பிரச்சினைகள் ஆராயப்பட்டு பாடசாலையில் அவர்களை மீண்டும் இணைத்தல், அவர்களுக்கு தேவை யான உதவிகளை வழங்குதல், வழிகாட்டுதல் களை நாம் வழங்குகின்றோம்.

மாணவர்கள் தொடர்ந்தும் பாடசாலைக்கு செல்கின்றார்களா? என்பதை பெற்றோரும், அப்பகுதி கிராம அமைப்புக்களும் தீவிரமாக கண்காணிக்க வேண்டும்.

சனசமூக நிலையங்கள் இதற்கு முன்னோடியாக இருந்து நல்லூர் பிரதேச செயலக சிறுவர் பகுதியுடன் இணைந்து செயற்பட வேண்டும் எனத் தெரி விக்கப்பட் டுள்ளது. (ஓ-36)




## வடிகால்களை தடைசெய்வோர் மீது சட்ட நடவடிக்கை

வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட சுன்னாகம் கந்தரோடை வடிகால், சுன்னாகம் மதவடி வடிகால், உடுவில் டச் றோட் வடிகால் என்பன திருத்தம் செய்யப்பட்டுள்ளன.

இவற்றிற்கு தடைகள், ஊறுகள் ஏற் படுத்தாது பாதுகாப்பது பொதுமக்களின் கடமையாகும் என்றும் இதை மீறி வடிகாலின் நீரோட்டத் தைத் தடைசெய்யக் கூடியவாறு மண், குப்பை, ஏனைய கழிவுகள் போடு வோர் மீது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 60-10,62 இன் பிரகாரம் தகுந்த நடவ டிக்கை எடுக்கப்படும் என்றும் சுன்னா கம்,வலி.தெற்கு பிரதேச சபை செயலாளர் திருமதி ச.சொக்கலிங்கம் அறிவித்துள் ளார். (ஓ)

## கல்வி விழிப்புணர்வு செயற் திட்டம்

வலிகாமம் கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினால் கிராமங்கள் மற்றும் நலன்புரி நிலையங்களில் பெற்றோர்கள், பிள்ளைகளுக்கான கல்வி விழிப்புணர்வு செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இதன் பிரகாரம் வலிகாமம் வலயத் திற்குட் பட்ட 12 கிராமங்கள், 8 நலன்புரி நிலையங் கள் இனங்காணப்பட்டு அவற்றில் பாடசாலை செல்லாத பிள்ளைகள், பல்வேறு காரணங் களினால் பாடசாலையை விட்டு இடை விலகிய மாணவர்களுக்கு கல்வி வழங்கு வதற்கும்,பாடசாலைக்கு வரவு ஒழுங்கீனமான மாணவர்களின் வரவை சீராக்குவதற்கும், கட்டாயக்கல்வி, வளர்ந்தோர் கல்விச் செயற் பாடுகளை முன்னெடுப்பதற்கும் நடவடிக் கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் இச் செயற்றிட்டம் தொடர்பான செயலமர்வுகளும் நடாத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக் கது. (ஓ-6)

## புதிய நிர்வாக சபை உத்தியோகத்தர் தெரிவு

சாவகச்சேரி புலேந்தன் பாலர் பகல் பரா மரிப்பு நிலைய ஆண்டு பொதுக் கூட்டத்தில் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் சி. சிவகரன் முன்னிலையில் 2009 ஆம் ஆண் டுக்கான நிர்வாக சபை உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் தலைவராக வை இராசரத்தினம், செயலாளராக சி. மதீஸ்வரன், பொருளாளராக திருமதி. ம. கீர்த்திநாதன், உபதலைவராக சி. மகாலிங்கம,உபசெயலாளராக ம. விவேகானந் தன் ஆகியோருடன் 11 நிர்வாக சபை அங்கத் தவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (ஓ-4-29)

## எந்திரவியல் இறுதியாண்டு மாணவர்களுக்கான பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் எந்திரவியல் தொழில்நுட்ப பீடத்தில் கல்வி பயிலும் இறுதி ஆண்டு மாணவர்களுக்கான சகல பரீட்சைகளும் நாளை ஞாயிற்றுக் கிழமை யாழ். பிராந்திய நிலையத்தில் இடம்பெற வுள்ளதாக யாழ்.பிராந்திய இணைப்பாளர் கி.கந்தவேள் தெரிவித்துள்ளார். (ஓ-7)

## பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை ஆத்திப்புலம் அருள் மிகு ஸ்ரீ சந்திர சேகரப்பிள்ளையார் ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு சிவலிங்க யோக கேந்திரா நிலையத்தினால் நடத்தப் பட்ட சைவ சமய அறிவுப் போட்டியில் வெற்றி யீட்டிய மாணவர்களுக்கான பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்தில், சிவலிங்க யோககேந்திரா நிலையத் தலைவர் நா. நவராஜ் தலைமையில் நடைபெறவுள் ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலம்புரி நிர்வாக இயக்குநர் வெற்றி வேலாயுதம் கலந்து சிறப்பிப்பதுடன் ''தீர்த்த உற்சவம் உணர்த்தும் தத்துவம்'' என்னும் விடயத்தில் சைவப்புலவர் நித்தியதசிதரன் சிறப்பு சொற்பொழிவு ஆற்றுவார். (ஓ-4)

## சமூக ஓய்வூதியத் திட்ட பயனாளிகளுக்கு

(சாவகச்சேரி)

சமூக ஓய்வூதியத் திட்டத்தில் தென்ம ராட்சிப் பிரதேசத்தில் இணைக்கப்பட்ட பய னாளிகளுக்கான தவணைக் கட்டணப் புத்தகம் தென்மராட்சிப் பிரதேச செயல சமூக சேவைகள் பிரிவில் எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை பெற்றுக் கொள்ளலாம் என்று பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தெரி வித்தார். (ஓ-29)

## சஞ்சிகை வெளியீடும் கலாசார விழாவும்

(யாழ்ப்பாணம்)

சாவற்கட்டு மகாத்மா சிறுவர் கழகத்தினால் நடத்தப்படும் ''இளங்கதிர்'' சஞ்சிகை வெளி யீடும் கலாசார மகாத்மா விளையாட்டு அரங் கில் க. மயூரன் தலைமையில் நடைபெறவுள் ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யுனிசெவ்வின் சிறுவர் பாதுகாப்பு நிபுணர் மகி நோடா கலந்து சிறப்பிப்பதுடன்சிறப்பு விருந் தினர்களாக இலங்கை சிறுவர் பாது காப்பு நிறுவன திட்ட உத்தியோகத்தர் திருமதி சுதர்ஸன் சர்மிளா, சாவற்கட்டு கிராமசேவை யாளர் திருமதி யே. பிறேசில்டா கலந்துகொள்வ துடன் கௌரவ விருந்தினர்களாக சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி பிரபாக ரன் சத்தியவதனி, சொன்ட் நிறுவன திட்ட இணைப்பாளர் செ. பிரகாஷ், முன்பள்ளி இணைப்பாளர் திருமதி. யோ. கேமநளினி, சமுர்த்தி உத்தியோகத்தர் திருமதி. சிவகுமார் ரேவதி, ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாட சலை அதிபர் சி. நாகையா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-4)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். கைதடி நுணாவில் அ.த.க. பாடசா லையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று முற்பகல் 8.30 மணிக்கு மட்டு வில் வளர்மதி விளையாட்டு மைதானத்தில் அதிபர் த. அம்பலவாணர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென் மராட்சி கோட்ட கல்வி அலுவலர் நா. சத்திய நாதன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந் தினராக தென்மராட்சி கல்வி வலய முதன்மை ஆசிரியர் இ. சர்வேஸ்வரன் கலந்து கொள்ள வுள்ளார். (ஓ-4)

## ஏகாதசி தீர்த்தம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீ நாக வரத நாராயணர் தேவஸ்தானத்தில் இன்று சனிக் கிழமை ஏகாதசி தீர்த்தம் முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் காலை 8 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூஜைகள் ஆரம் பமாகி அதைத் தொடர்ந்து காலை 9 மணிக்கு சமயச் சொற்பொழிவும் முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் 11 மணிக்கு ஏகாத சித் தீர்த்தமும் நடைபெறவுள்ளன. (ஓ-4)




ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் புகழ்பூத்த அதிபர் செ.சிவநடராசாவின் ''மணிவிழாவும் நூல் வெளியீடும்'' நிகழ்வில் விழாநாயகனும் அவரது துணைவியாரும் மங்கல விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும், விருந்தினர்களுடன் விழாநாயகன் மேடையில் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# இலங்கையில் தமிழர் 90

### ஹெள மக்களும் தமிழ் மக்களும் பொ.ஆ.300-900

பல்லவ அரசின் வளர்ந்த பண்பாடு வட கிழக்காக வழியாக இலங்கையில் பரவியது. தமிழ்நாட்டுக்கும் இலங்கைக்கும் இடையில் இருந்த கடல் மீண்டும் ஓர் ஒற்றுமை படுத்தும் காரணியாகச் செயற்பட்டது.

முதலில் தமிழ்நாட்டின் செல்வாக்கு பௌத்தம் சார்ந்ததாகவும், சைவம் சார்ந்த தாகவும், தமிழ்மொழி சார்ந்ததாகவும், சமஸ் கிருதம் சார்ந்ததாகவும் அமைந்தது. பின்னர் அது பெரும்பாலும் சைவமும் தமிழும் சார்ந் ததாக மாறியது.

இவ்விரண்டு காரணிகளும் வடக்கிலும் கிழக்கிலும் உருவாகிய இனக்குழுவை நிர்ண யிப்பதில் முக்கிய பங்கு [illegible]. ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக அங்கு உருப் பெற்றுக் கொண்டிருந்த இனக்குழு, பத்தாம் நூற்றாண்டளவில் உறுதிபெற்று வெளிப் பட்டது.

### பத்தாம் நூற்றாண்டின் இறுதி

பத்தாம் நூற்றாண்டு முடியும் கட்டத்திலும் பதினோராம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வெளிப்படுவது என்ன? அதாவது சோழர் இலங்கையின் வடபாகம் முழுவதையும் கைப் பற்றிய போது தெரிய வருவது என்ன? சோழர் வருகைக்கு முற்பட்ட நூற்றாண்டுக ளில் வடபகுதியில் ஏற்பட்ட மாற்றத்தை இரு வகைப்பட்ட சான்றுகள் தெளிவாக உறுதிப் படுத்துகின்றன.

ஒன்று, பரவலாக வடபகுதியில் காணப் படும் தமிழ்க் கல்வெட்டுக்கள் மற்றது, பல இடங்களில் காணப்படும் சைவக் கோயில் களின் அழிபாடுகள். இத்தமிழ்க் கல்வெட்டுக் கள் பெரும்பாலும் சோழ ஆட்சியாளர்களைக் குறிப்பிடுகின்றன.

அதேபோல, சைவக் கோயில்கள் பெரும் பாலும் சோழ மன்னர்களுடைய பெயர் களைத் தாங்கியவை. வட பகுதியில் ஒரு சில தமிழ்ப் பௌத்த பள்ளிகள் கூடச் சோழ ஆட்சியாளர் பெயர்களைத் தாங்கியிருந் தன.

மேற்கே மாதோட்டத்திலிருந்து கிழக்கே திருகோணமலை வரையுள்ள நிலப் பகுதி மேற்கூறிய சான்றுகள் பெரும்பாலும் காணப்படும் பகுதியாக, தமிழ் மக்கள் வாழும் இடங்களையும் சிங்கள மக்கள் வாழும் இடங் களையும் எல்லைப்படுத்தும் பகுதியாகத் தோன்றியிருந்தது.

வடபகுதி தமிழும் சைவமும் மேலோங்கிய இடமாக மாற்றம் அடைந் ததைப் பத்தாம் நூற்றாண்டின் இறுதியில் தெளிவாகக் காணலாம்.

மேற்கூறிய எல்லைப் பகுதிக்கு வடக்கே பத்தாம் நூற்றாண்டுக்கு முன் ஏற்பட்ட பரிணாம வளர்ச்சியைச் சுருக்கமாகக் கூறுவ தாயின், அங்கு வாழ்ந்த நாகரும் பிற இடைக் கற்கால மக்களும் பின்னர் அங்கு சென்ற தெலுங்கர், கேரளர் மற்றும் கன்னடர் ஆகியோரும் ஹெள மக்களும் தமிழரு டைய மேலோங்கிய செல்வாக்கினாலும் தமிழ் மொழியின் பரம்பலினாலும் ஓர் இனக் குழு வாக மாற்றமடையும் வழியில் சென் றனர்.

இவர்கள் பெரும்பாலும் பௌத்தத் தைத் தழுவியோராகத் தொடக்க நூற்றாண்டு களில் காணப்பட்ட போதும் காலப்போக்கில் பௌத்தம் வலுவிழக்கச் சைவம் அவர்களு டைய முக்கிய மதமாகியது.

### வடக்கு இலங்கை 300-900

வடக்கு இலங்கையில் (மன்னார், வவு னியா திருகோணமலை, முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய தற்கால மாவட்டங்களையும் அனுராதபுர மாவட்டத்தின் வடபாகங்களையும் உள்ளடக் கிய பிரதேசம்) 300க்கும் 900க்கும் இடைப் பட்ட காலப் பகுதியில் ஏற்பட்ட வளர்ச்சி தொடர்பாக இதுவரை ஒரு சில சான்றுகளே கிடைத்துள்ளன.

சில கல்வெட்டுக்கள், சிற் பங்கள், நாண டுகள் ஆகியவற்றுடன் பாளி வரலாற்றேடு களிலும் கிரேக்க - ரோம நூல்களில் உள்ள சில குறிப்புக்களுமே இப் பிரதேசத்தின் வரலாற்றுக்கு மூலங்களாக உள்ளன.

தொல்லியல் ஆய்வு முறைப்படி நடத்தப் படும் வரை இப்பிரதேசத்தின் தொடர்ச்சி யான, தெளிவான வரலாற்றை அறிந்து கொள்வது கடினம்.

இச் சான்றுகளைக் கொண்டு பெறக் கூடிய மறுக்க முடியாத முடிபு ஒன்று என்னவெனில் இவ் வட பிரதேசத்தில் பௌத்தம் முக்கிய மான ஒரு மதமாக இக் காலப்பகுதியில் காணப்பட்டது என்பதாகும்.

அனுராதபுரத்தில் வழக்கில் இருந்த பௌத்தத்தில் இருந்து வட பகுதியின் பௌத் தம் சில வேறுபட்ட பண்பு களை வெளிப் படுத்தியது என்பதும் இச் சான்றுகளால் தெரிய வருகின்றது. யாழ்ப் பாண மாவட் டத்தில் பௌத்தம் ஆந்திரச் செல் வாக்கைக் காட்டி நிற்க, திருகோணமலை மாவட்டத்தில் பல்லவ அரசின் மஹாயான பௌத்தத்தின் செல்வாக்கும் மிகுந்திருந்தது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தேரவாத பௌத்த மும் பாளி மொழியும் செல்வாக்குப் பெற்ற சக்திகளாக அமைய, திருகோண மலை மாவட் டத்தில் மஹாயான பௌத்த மும் சமஸ்கிருத மொழியும் செல்வாக்குப் பெற்றிருந்தன.

இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாண மாவட்டத்தில் பரவத் தொடங்கிய பௌத்தம் இலங்கையின் பிற பகுதிகளில் மூன்றாம் நூற்றாண்டுகளில் வளர்ச்சி பெற் றுச் சென்றது.

பேராசிரியர்
**கா. இந்திரபாலா**

இங்கு எடுத்து ஆராயப்படும் காலப் பகுதியில் (300-900) யாழ்ப்பாண மாவட் டத்தின் பல இடங்களில் பௌத்தம் நிலவி யதற்கான தொல்லியல் சான்றுகள் கிடைத் துள்ளன.

கந்தரோடை, வல்லிபுரம், நயினாதீவு, புங்குடுதீவு, நெடுந்தீவு, பொன் னாலை, மாகியப்பிட்டி, சுன்னாகம், நிலா வரை மற்றும் உடுவில் ஆகிய இடங்கள் இவற்றுள் அடங்கும். இத் தொல்லியல் தலங் களுள் மிகவும் பிரசித்தி பெற்றது கந்தரோடை ஆகும்.

(தொடரும்)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச் சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை

9

கைதடி பள்ளிக்கூடம் ஒன்றில் 6ஆம் வகுப்பில் கல்வி பயிலும் மாணவி ஒருவர் ஒபாமா பற்றி ஒரு சிறிய கட்டுரை ஒன்றை எழுதியிருந்தார். அவரின் ஆசிரியை அம் மாணவியைப் பாராட்டியது தெரியவந்தது. அத்தகைய மாணவர்களுக்கு உதவும் வண்ணம் ஒபாமாவின் தோற்றம், ஏற்றம், அவர் ஏற்படுத்தப் போகும் மாற்றங்கள் ஆகியனவற்றை கீழே கால அட்டவணையின் படி தருகிறோம்.

மேலும் நோபல் சமாதானப் பரிசுக்கு அவர் பெயரும் பரிந்துரைக்கப்பட்டுள்ளமை அவரின் வரலாறு முக்கியத்துவம் பெறுகிறது.

**1961:** பராக் ஒபாமா 18 வயது நிறைந்த அமெரிக்க வெள்ளைக்காரப் பெண்மணி ஆன்டன்ஹாம் என்பவருக்கும் 25 வயது நிரம்பிய பராக் ஒபாமா என்ற கென்யா நாட்டு மாணவனுக்கும் பிள்ளையாகப் பிறந்தார்.


ஹவாய் மாநிலத்தில் கல்லூரிக் காதல். ஒபாமா பிறப்பதற்கு 6மாதங்களுக்கு முன்பு தான் தாயும் தந்தையும் சட்ட ரீதியான திரு மணம் செய்து கொண்டனர்.

**1967:** ஆன் டன்ஹாம் ஒபாமாவின் தந்தையுடனான தனது திருமணத்தை விலக்க வேண்டியேற்பட்டது. அதனைத் தொடர்ந்து அவர் இந்தோனேஷிய மாண வனான லோலோ சோற்ரோறோ என்பவ ரை மணமுடித்தார். ஒபாமாவுக்கு ஆறு வய தான போது தாயும் மகனும் ஜகார்தாவுக்குச் சென்றனர். அங்கே ஒபாமாவுக்கு தனியாகப் பாடங்கள் நடத்தி தாயே கல்வியைத் தொடர்ந் தார்.

**1971:** ஒபாமாவுக்கு வயது பத்து. அவர் ஹொனோலுலுக்கு அவருடைய வெள்ளைக் காரப் பேரன் பேர்த்தியோடு வாழுமாறு அனுப்பி வைக்கப்பட்டார். பேரன் (Stanley Dunham) ஸ்ரான்லி டன்ஹாம், பேர்த்தி (Madelyn Dunham) மடிலின் டன் ஹாம்.

புனாஹொன என்ற பிரபலமான ஆரம்ப பாடசாலையில் கல்வி பயில அவருக்கு புலமைப் பரிசில் கிடைக்கிறது.

**1972:** ஒபாமாவின் தாயாரான ஆன் டன்ஹாம் ஹவாய் மாநிலத்துக்கு இரண்டு வயது நிரம்பிய தன் மகள் மாயாவைக் கூட்டிக்கொண்டு திரும்புகிறார். கணவன் இந்தோ னேஷியாவிலேயே தங்கிவிடுகிறார். ஒபாமாவின் தந்தை கென்யாவிலிருந்து



தாய் மற்றும் சகோதரியுடன் ஒபாமா

வந்து தன் மகனையும் அவர் தம் தாயையும் பார்க்கிறார். இதுதான் அவர் தன் மகனைக் கடைசியாகப் பார்த்தது.

**1979:** ஒபாமா லொஸ் ஏஞ்சல்ஸில் உள்ள ஒக்சிடன்ரல் கல்லூரியில் கல்வியைத் தொடர்கிறார். இரண்டாவது ஆண்டு முடிந்த பின் தனது படிப்பை நியூயோர்க்கில் உள்ள கொலம்பியா பல்கலைக்கழகத்திற்கு மாறு கிறார். அங்கு தனது (B.A.) பட்டத்தைப் பெறு கிறார். அரசியல் அறிவு, சர்வதேச தொடர்பு ஆகிய இரு துறைப் பாடங்களில் விசேட மான தேர்ச்சி பெற்றார்.

**1982 :** ஒபாமாவின் தந்தை பராக் தனது 46 ஆவது வயதில் கார் விபத்தொன்றில் மரணமடைகிறார். ஒபாமா (மகன்) சமூகப் பணிகளை மேற்கொள்ளத் தீர்மானிக்கிறார். இனம், வறுமை ஆகிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதே அவர் தம் நோக்கம்.

**1983:** தன் பட்டப்படிப்பை முடித்த கையோடு அவர் மன்ஹற்றனில் உள்ள வர்த்தக வெளியீட்டாளரிடம் கனிஷ்ட எடிட்ட ராக (Junior editor) பணியை ஆரம்பிக் கிறார்.

**1984:** சிக்காக்கோவில் இயங்கிவந்த சமூகங்களின் வளர்ச்சிக்கான திட்டம் (Developing Communities Project) என்ற ஒரு குழுமியத்தில் வேலைக்கமர்ந்தார்.

அங்கு பல திட்டங்களை செயற்படுத்தி உள்ளார். பாடசாலைகளின் சீர்திருத்தங் களும் அத் திட்டங்களில் அடங்கியுள்ளன.

**1988:** (Harvard Law School) ஹாவார்ட் சட்டக் கல்லூரியில் சேருமுன் 26 வயதான ஒபாமா தன் தந்தையின் குடும்பத்தை தரிசித்து அளவளாவ விரும்பி கென்யா நாட்டுக்குச் சென்றுவந்தார்.

சட்டக் கல்லூரியில் முதலாம் ஆண்டு படிப்பு முடிந்தபின் சிக்காக் கோவில் முன்னிலையில் உள்ள ஒரு சட்ட நிபுணர் நிறுவனம் கோடை விடுமுறைக் காலத்தில் ஒபாமாவை. சட்ட பயிற்சியாளராக அமர்த்தியது.

அங்கேதான் அவர் செல்வி மிசேல் றொபின்சனைச் சந்திக்கிறார். இப் பெண் மணி ஹாவார்ட் பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்று இளம் வழக்கறிஞராக அந்த நிறு வனத்தில் வேலை பார்த்து வந்தார். ஒபாமா வும் மிசேலும் நெருங்கிப் பழக வாய்ப்புக் கிடைத்தது.

**1990:** ஹாவார்ட் சட்டக் கல்லூரியில் இருந்து வெளியாகும் மலர் தான் ஹாவார்ட் சட்ட மீளாய்வு (Harvard Law Review) இதன் தலைவராகத் தேர்தெடுக்கப்படுபவர் வழக்க மாக இதுவரை வெள்ளைக்கார மாணவர் களாகத் தான் இருந்தார்கள்.

ஆனால் 1990 இல் முதன் முறையாக ஆபிரிக்க அமெரிக்கரான ஒபாமா தேர்ந் தெடுக்கப்பட்டார்.


**1991:** ஒமாபா ஹாவார்ட் பல்கலைக்கழகத் தின் சட்டத்துறைப் படிப்பில் டாக்டர் பட்டம் பெற்று வெளிவந்தார். தனது சுயசரிதமான " எனது தந்தையின் கனவுகள்" என்ற நூலை எழுத ஆரம்பித்தார். " Dreams from my father"

**ஜம்பொன்**

**1992:** சிக்காக்கோவுக்கு திரும்பியதும் ஒபாமா "டேவிஸ், மைனர், பாண் ஹில், கலாட்" என்ற சட்டக் கம்பனியொன்றில் கனிஷ்ட வழக்கறிஞராகத் தொழில்புரிய ஆரம்பித் தார். இந்த வருடத்தில் தான் ஒபமா தன் காதலி மிசேலை திருமணம் புரிந்துகொண் டார்.

(தொடரும்)

# உலகை உலுக்கும் பொருளாதார பெருமந்தம்



**ஏ.சி.ஜோர்ஜ்**
ஆசிரிய ஆலோசகர்
யாழ்.வலயக் கல்வி அலுவலகம்

**அறிமுகம்**

பொருளியல் அறிஞர்களான Kehoe and Prescott என்பவர்களின் கருதுப்படி பொருளாதாரப் பெருமந்தம் அல்லது பொருளாதாரப் பின்னடைவு (Economic recession) என்பது ஒரு நாட்டினுடைய உற்பத்தியானது (Economic output) ஆகக் குறைந்தது ஒரு வருட காலத்திற்கேனும் அதன் நடைமுறையினுள்ள உற்பத்தி மட்டம் 20% கீழ் குறைந்து செல்லுமாயின் (diminshing) அக் காலப் பகுதியினை பொருளாதாரப் பின்னடைவுக் காலம் என அழைக்கலாம் எனக் கூறுகின்றனர்.

19 ஆம் நூற்றாண்டில் பிரித்தானியப் பொருளியலாளர்களும் இக் கருதினை ஏற்று தமது நாட்டில் அத்தகையவொரு நிலையை விளக்கினர். இப் போக்கானது உலகம் தழுவிய ரீதியில் (World Wide) காணப்படுமாயின் அது உலகப் பொருளாதாரத்தின் சரிவு அல்லது பின்னடைவு என வரையறை செய்து கொள்ள முடியும்.

மேற்குறிப்பிட்ட விளக்கத்திற்கு அமைய 1929 இல் உலகம் பூராவும் ஒரு பொருளாதார மந்தம் அல்லது கீழ்முகம் நோக்கிய பொருளாதாரச் சரிவு (Economic down turn) ஆரம்பித்தது.

இது 1930 களின் கடைசி வரையும் நீடித்தது. நவீன பொருளியல் வரலாற்றில் முக்கியமானதும் மிகப் பாரதூரமானதுமான பொருளாதார மந்தமாக இது கருதப்படுகின்றது. 1930 இன் பின்னர் பல பொருளாதாரப் பின்னடைவுகள் உலகின் வேறு வேறு பகுதிகளில் நிகழ்ந்தது. இருந்தபோதும் அகிலம் தழுவிய வகையில் இடம்பெற்ற பெருமந்தம் இதுவே ஆகும்.

அத்துடன் 1929 இன் பெருமந்தமே 21 ஆம் நூற்றாண்டின் பொருளாதார பின்னடைவுகளை ஊகிக்கக் கூடிய ஒரு bench-mark ஆக இன்று வரை காணப்படுகின்றது. இந்த 30களின் பெருமந்தம் பொருளாதார சரிவு அல்லது நிதி நெருக்கடி ஐக்கிய அமெரிக்காவிலே ஆரம்பமானது. பொருளாதார வரலாற்று பண்டிதர்கள் அன்றைய அந்தப் பொருளாதாரச் சரிவின் ஆரம்ப நிகழ்வு (Starting date) பங்குச் சந்தைகளில் (Stock Market Crash) October 29,1929 ஆரம்பித்ததாகக் கூறுகின்றனர்.

பொருளியல் பண்டிதர்கள் அன்றைய நாளை " Black Tuesday" என்றனர். அந்தப் பெருமந்தம் உலக நாடுகளை யுத்தப் பொருளாதாரமொன்றுக்கு இட்டுச் சென்றது. (War economy)

இப் பெரும் பொருளாதார பின்னடைவானது உலகப் பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தினைஏற்படுத்தியது.

- 13மில்லியன் பேர் வேலை வாய்ப்பினை இழந்தனர்.
- 1924க்கும் 1932 க்கும் இடைப்பட்ட காலத்தில் கைத்தொழில் துறையின் உற்பத்தியானது 45% வீழ்ச்சி கண்டது.
- 1929 க்கும் -1932க்கும் இடையில் வீட்டு வசதிகள் நிர்மாணம் 80% வீழ்ச்சியடைந்தது.
- 1929-1932 இடையில் 5000 வங்கிகள் வர்த்தகக் கொடுக்கல் வாங்கலில் இருந்து வெளியேற்றப்பட்டன. (Went out of Business)
- ஐக்கிய அமெரிக்கப் பங்குச் சந்தை 89.5% பெறுமதியினை இழந்தது.

**2008 அமெரிக்காவின் நிதி நெருக்கடியும் நெருக்கடி மீட்பு நடவடிக்கையும் (Bail out)**

2008 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் இருந்து சர்வதேச சந்தையில் எண்ணெய் விலையானது என்றுமே இல்லாத அளவுக்கு ஒரு பரல் எண்ணெயின் விலை நாள் தோறும் அதிகரித்து வந்தது. 2009 இல் அது ஒரு பரல் -200 U.S பொலரினை அடையும் எனவும் உலகப் பொருளாதாரம் பெரும் சரிவினை எண்ணெய் நெருக்கடியால் எதிர்கொள்ளும் எனவும் பொருளியல் பண்டிதர்கள் கூறிக்கொண்டு இருக்கையில், 2008 இறுதிப் பகுதியில் உலகப் பொருளாதார நெருக்கடிக்கான நிலைமை வேறொரு பகுதியில் இருந்து வெளிவந்து எல்லா நாடுகளையும் ஆட்டம் காண வைத்தது.

அதாவது 1929 இல் எந்த நாட்டில் எந்தப் பகுதியில் இருந்து அந்தப் பெருமந்தம் ஆரம்பித்ததோ அங்கிருந்தே இம்முறையும் உலகப் பொருளாதாரத்தினை நெருக்கடிக்குத் தள்ளிவிட்டுப் போகும் என எதிர்பார்க்கும் ஆபத்துத் தோன்றியுள்ளது. அமெரிக்காவின் நிதிச் சந்தையில் ஏற்பட்டிருக்கும் நிதி நெருக்கடியும் (Financial crisis) அதனை மீட்பதற்காக 700 பில்லியன் U.S. டொலரினை அமெரிக்க அரசாங்கம் ஈடுசெய்து நெருக்கடியில் இருந்து அமெரிக்க நிதிச் சந்தையினை மீட்பதற்கான நடவடிக்கையிலும் ஈடுபட்டது.

அமெரிக்காவின் Wall Street ல் ஏற்பட்ட நிதி நெருக்கடியானது உலகின் பல பாகங்களிலும் எதிரொலித்தது மட்டுமன்றி உலகப் பொருளாதாரத்தினை மீண்டுமொருமுறை பொருளாதாரச் சரிவின் ஆபத்து விளிம்பிற்கு இட்டுச் சென்றுள்ளது.

தற்போதைய நிதி நெருக்கடியும் அதனுடன் இணைந்ததான பொருளாதாரச் சரிவும் உலகப் பொருளாதாரங்கள் எதிர்நோக்கி வரும் பொருளாதாரப் பின்னடைவும் (Economic recession) பற்றி முதலாளித்துவ புதிய தாராளவாத பொருளியல் சிந்தனையாளர்களும், உலகின் பிரபல சஞ்சிகைகளான நியூஸ்வீக், டைம்ஸ் மகசின் என்பவற்றில் பிரபல பொருளியல் ஆய்வாளர்களும் எழுதிய கட்டுரைகளிலும் அதற்கான பல காரணங்களை முன்வைத்துள் ளனர்.

தற்போதைய நிதி நெருக்கடி அல்லது கீழ் முகம் நோக்கிய பொருளாதாரச் சரிவு, இதற்கான காரணம், பின்னணி, எவ்வாறு உலகப் பொருளாதாரம் முழுவதினையும் அது பாதித்து வருகின்றது, இப் பின்னடைவுக்கான காரணம் என்ன? எவ்வாறு இது தோற்றம் பெற்றது? என்பன பற்றி பல்வேறு விதமான விளக்கங்களும் அதனுடன் இப்பின்னடைவில் இருந்து அமெரிக்கப் பொருளாதாரத்தினையும், உலகப் பொருளாதாரத்தினையும் மீட்டெடுப்பதற்கான (Bail out) உபாயங்கள் எவை என்பன பற்றியும் நோக்குவதற்கு முன்னர், உலக நிதி நெருக்கடி குறித்துப் புரிந்துகொள்வதற்கு பொருளாதாரக் கொள்கைகள் பற்றிய ஒரு வரலாற்றுப் பார்வை அவசியமாகின்றது. மேலும் தற்போதைய நிதி நெருக்கடியானது நேற்றே, நேற்று முன்தினமோ ஏற்பட்ட ஒன்றல்ல.

- Free enterprise
- Free competition

என்பன இவரின் பழம் தாராளவாதப் பொருளியல் சிந்தனையாக காணப்பட்டது.

USA யிலும் UK யிலும் 1800-1900 இடையில் பொருளாதார தாராளவாதம் காணப்பட்டது. 1930களின் பெருமந்தத்தினைத் தொடர்ந்து J.M. கெயின் என்பவரினால் நல அரசு பற்றிய சிந்தனை முன்வைக்கப்பட்டது. (1933-1946) முதலாளித்துவம் வளர நிறை தொழில் மட்டமொன்றினை அரசு உருவாக்க வேண்டும் என்றும் தாராளவாதம் முதலாளித்துவத்திற்கு சிறந்தது என்வும் அவரால் புதிய பொருளாதார (New Economics) கொள்கை முன்மொழியப்பட்டது.

அமெரிக்காவின் அன்றைய ஜனாதிபதி Roosevelt கெயின்சின் ஆதரவாளராக மாறி கெயின்சின் பொருளாதார சிந்தனை-முதலாளித்துவத்தினையும் ஆதரித்தார்.

கெயின்சின் பொருளாதார சிந்தனைகளுக்குப் பின்னர் சிக்காகோ பல்கலைக் கழகத்தின் பொருளியல் தத்துவவியலாளரான Friedrick von Hayek க்கும் அவரது மாணவனான மில்டன் பீட்பனும் இணைந்து புதிய தாராளவாத சிந்தனையொன்றினை முன் வைத்தனர்.(Neo -liberal Thinking).

1970களில் இச் சிந்தனையை விளக்கவும் பரப்புரை செய்யவும் பெரும் வலைப் பின்னல் ஒன்றினையும் இவர்கள் ஏற்படுத்தினர். They Created a hauge net works funders insitution research centres Publication to push their ideas and doctrine.

உண்மையில் நவ தாராளவாதம் என்பது ஒரு கோட்பாடாகவும் அதே சமயம் ஒரு தந்திரோபாயமாகவும் விளங்கியது. Neo- liberalism is both an ideology and a strategy.

புதிய தாராளவாத சிந்தனையின் முதலாளித்துவ பொருளாதாரமொன்றில்

- *தனியார் மயமாக்கல் (Privatization)*
- *தனியார் சொத்துடமை (Private Property)*

சுருக்கமாகக் கூறின் புதிய தாராளவாதம் என்பது சந்தைப் பொருளாதாரமொன்றின் சட்டமாகக் கொள்ளப்பட்டது. Rule of the Market

பொது நிதியினைவெட்டுவது ( Cutting Public Expenditure) ,பொருளாதார விடயங்களில் தலையிடாமை deregulation என்பன முக்கியமானவை.

சிக்காகோ பல்கலைக்கழகத்தின் பொருளியல் தத்துவவியலாளர் Philosopher Economist Friedrick vov Hayek உம் அவரது மாணவனான மில்டன் பீறிட்மன் (Milton Fried man)இணைத்து உருவாக்கிய புதிய தாராளவாதம் ஒரு புதிய கோட்பாடாக முதலா ளித்துவ பொருளாதாரங்களில் முன்வைக்கப்பட்டது.

இச் சிந்தனைப் போக்கிற்கு பல கூட்டாளிகளும் முதலாளித்துவப் பொருளாதாரங்களில் தோன்றினர். அமெரிக்காவில் றோனால்ட் ரீகனும் பிரித்தானியாவின் மாக்கிரட் தட்சரும் புதிய தாராளவாத சிந்தனைக்கு உரமூட்டினர் . Reagonomics, Thatcherism, Supply Side Economics, Monetarism, New Classical econamics, and Structural Adjestment , Washington Consensus என்பன ஒட்டு மொத்தமாக புதிய தாராளவாத சிந்தனைகளாக அமுல்படுத்தப்பட்டன .இவை யாவும் பொருளாதாரச் செயற்பாடுகளில் deregulation னை ஆதரித்தன. வேறு வார்த்தையில் இதனைக் கூறுவதாயின் Market can rule Themselves. சந்தைகள் தாமே தம்மை ஒழுங்குபடுத்திக் கொள்ளும்.

## 2008 இன் பொருளாதார சரிவும் முண்டுகொடுக்கும் முயற்சியும்

## Economic depression and Bail out Policy

கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக அமெரிக்கப் பொருளாதாரங்களில் இடம்பெற்ற நிதிசார் நடவடிக்கைகளே காரணங்களாக இருக்கின்றன. அத்தகைய நிதி நடவடிக்கை மாற்றங்களுக்கு அப் பொருளாதாரங்களில் கடந்த பல காலங்களாக இடம்பெற்று வந்த பொருளாதாரக் கொள்கை மாற்றங்கள் காரணமாக அமைகின்றன. இக் காரணத்தினால் பொருளாதார நெருக்கடியினைப் புரிந்துகொள்வதற்கு பொருளாதாரக் கொள்கைகள் பற்றிய ஒரு வரலாற்று நோக்கு தேவைப்படுகின்றது.

**பொருளாதாரக் கொள்கைகளின் வரலாற்றுப் பார்வை**

அடம் ஸ்மித் என்னும் பொருளியல் அறிஞரால் அரச தலையிடா பொருளாதாரக் கொள்கை வாதம் முன்மொழியப்பட்டது. Market Economy with no Government intervention இதனை Laissey -Faire Policy எனவும் அழைப்பர். இந்த சிந்தனையைப் பழைமைவாதிகளின் பொருளாதார தாராண்மைவாதம் எனவும்குறிப்பிடுவர். Classical School of Economic Liberalism இச் சிந்தனைகளின் அடிப்படையில் முதலாளித்துவ பொருளாதாரம் தோற்றம் பெறுகின்றது.

***Dawn of Capitalism***
***Economic Freedom***
***Natural Order***
***Profit is the motive force***

என்பன இப்பொருளாதாரத்தின் பண்புகளாக இருந்தன. வேறொரு வகையில் கூறுவதாயின்,

- உற்பத்தியில் கட்டுப்பாடுகளற்ற தன்மை
- வர்த்தகத்தில் தடை காணப்படாமை (No barriers to commerce)
- வரி விதிப்புகள் இன்மை (No Tarriffs).
- கட்டற்ற வர்த்தகம் (Free trade) தேச பொருளாதாரத்தினை அபிவிருத்தி செய்வதற்கான சிறந்த மார்க்கம்

- The rule of market
- Cutting Public Expenditure
- Deregulation
- Privatisation
- Fiscal discipline
- tax reform
- Unified and competitive Exchange rates
- Trade liberalisation
- openess to FDI
- Private Property
- Market Economy
- Openess

என்பன அதன் தாரக மந்திரமாக இருந்தன. அமெரிக்காவிலும் அதன் கூட்டாளி நாடுகளிலும் நவ தாராளவாதம் முதளாளித்துவத்தின் பைபிளாகப் பின்பற்றப்படுவதற்கான பரப்புரைகள் செய்யப்பட்டன. அமெரிக்கர்களின் மண்டையில் இவை Memorize செய்யப்பட்டன. வாசிங்டனில் உடன்பாடு ஒன்று எய்தப் பட்டது. இந்த உடன்பாடு Political Washington க்கும் Technocratic Washington க்கும் இடையில் உருவானது.

The ideology of neo liberalism is the worship of the market and subordination of all other economic actors to its demands including government and individuals.

புதிய தாராண்மை வாதத்தினர் உச்ச சிந்தனையாக 1989ல் இடம்பெற்ற வாசிங்டன் உடன்பாடு (Washington Consensus முக்கியமானது. இதில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முதலாளித்துவ பொருளாதரத்தின்

- *நிதி சார் தளர்த்துகை (Financial liberalization)*
- *வர்த்தக தடை நீக்கம் (Trade liberalization)*
- *நேரடி வெளிநாட்டு முதலீடுகளுக்கு திறந்து விடுதல் (Openess To DFI )*

புதிய தாராளவாத பொருளாதார எழுச்சியினையும் அதன் கோட்பாடுகளையும் (doctrine) புரிந்துகொள்ளும் ஒருவர் தற்போதைய அமெரிக்க நிதி நெருக்கடிக்கான காரணங்களையும், அதனுடன் தொடர்புபட்ட கீழ் முகம் நோக்கிய உலகப் பொருளாதார சரிவினையும், விளங்கிக் கொள்ளுவது சுலப மானதாக அமையும் என்ற காரணத்தினா லேயே பொருளாதாரக் கொள்கை வளர்ச்சி பற்றிய பார்வை ஒன்றினை நோக்க வேண்டி ஏற்பட்டது. உண்மையில் புதிய தாராளவாதக் கொள்கைகளிலுள்ள அடிப்படைகளே தற்போ தைய நெருக்கடிக்கான பின் புலங்களாகும்.

குறிப்பாக வாசிங்டன் உடன்பாட்டில் வந்த நிதி சார்தளர்த்துகைகள் (Financial liberalization) அமெரிக்க நிதிச் சந்தையில் தரம் குறைந்த (SubPrime) வட்டிவீத நடவடிக்கைகள், வங்கிகள், நிதி நிறுவனங்களின் கடன் வழங்கல்கள், அடமான தொழிலில் அதிகளவு பணம் போடப்பட்டமை என்பனவற்றுக்கு அடிப்படை காரணங்களாகும்.

அமெரிக்கர்களின் பங்குகள் 1970களின் பின்னர் 16%இருந்து 50%திற்கு அதிகரித்தது .American owing Stock rose from 16% to 50% 1990 களில் வர்த்தக வங்கிகளையும் முதலீட்டு வங்கிகளையும் வேறுபடுத்தியிருந்த Glass- Steagal Act மீள வாபஸ் பெறப்பட்டதினால் வர்த்தக வங்கிகள் பெருமளவு வீட்டு அடமானத் தொழிலில் ஈடுபடவைத்தது.

Sub Prime நடவடிக்கைகள் மேலோங்கியது. இதனால் வீட்டு விலைகள் வரலாற்றில் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு வீழ்ச்சி கண்டன. கலிபோர்னியாவில் 30%மேலாக வீழ்ச்சி கண்டது .அத்துடன் சொத்துக்களின் பெறுமதி வீழ்ச்சிகண்டது Special interest rate, popular,politics, bad Economics and sheering competencies என்பன தற்போதைய நிலையை உருவாக்கின்றன.

(தொடரும்)

# பிறவியிலேயே பார்வையிழந்த பிரித்தானிய சிறுமிக்கு பார்வை!

## சீன மருத்துவர்கள் சாதனை




பிறவியிலேயே பார்வை இழந்த பிரித்தானிய சிறுமியொருவருக்கு புரட்சிகரமான கல சிகிச்சையை மேற்கொண்டு பார்வையை மேற்கொண்டு பார்வைப் புலனை வழங்கி சீன மருத்துவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

டகோதா கிளார்க் என்ற இந்த சிறுமிக்கு 30ஆயிரம் ஸ்ரேலிங் பவுன் செலவில் மேற்படி சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

இத்தகைய அரிய சிகிச்சைக்கு உட்பட்டு பார்வைப்புலனைப் பெற்ற முதலாவது பிரித்தானியர் என்ற பெருமையை இந்த சிறுமி பெறுகிறார். சீனத் தாய்மார்களால் தானமாக வழங்கப்பட்ட குருதியிலிருந்து பெறப்பட்ட மூலக் கலங்களை சிறுமியின் நெற்றிப் பகுதியினூடாகப் பார்வைப்புல நரம்புப் பகுதியில் செலுத்தி மேற்படி சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இந்த சிகிச்சையின் மூலம் அவரது பார்வை நரம்பிலிருந்த சேதம் திருத்தியமைக்கப்பட்டது. (6)

# உலகின் முதலாவது 'ரோபோ' ஆசிரியை



உலகின் முதலாவது இயந்திர (ரோபோ) ஆசிரியை உருவாக்கிய பெருமையை ஜப்பானைச் சேர்ந்த விஞ்ஞான பேராசிரியரான ஹிரோஷி கொபாயாஷி பெற்றுள்ளார்.

'சாயா' எனப் பெயரிடப்பட்ட இந்த ரோபோவானது, பன்முக தொழிற்பாட்டு ஆற்றலைக் கொண்டமைந்துள்ளது.

பாடப் புத்தகங்களிலான விடயதானங்கள் தொடர்பாக தெளிவாக விபரிக்கவும் மாணவர்களின் கேள்விகளுக்கு புதிலளிக்கவும் கூடிய வகையில் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி இந்த ரோபோ வடிவமைக்கப் பட்டுள்ளது.

அத்துடன் சூழ்நிலைக்கேற்ற வகையில் மகிழ்ச்சி, ஆச்சரியம், பயம், ஏமாற்றம், கவலை மற்றும் கோபம் உள்ளடங்கலான உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில், மேற்படி ரோபோவின் முகத்திற்குப் பின் 18 நுண்ணிய தொழில் நுட்ப இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

ஹிரோஷி கொபாயாஷி 15 வருட காலமாக இரவு பகலாக பாடுபட்டு இந்த அரிய ரோபோவை உருவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த ரோபோ ஆசிரியையானது டோக்கியோ நகரிலுள்ள ஆரம்ப பாடசாலையில் பரீட்சார்த்தமான கல்விப் போதனை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. (6)

# இஸ்ரேல் விமான தாக்குதலில் 3 பாலஸ்தீனியர்கள் பலி

(காசா)

பாலஸ்தீனத்தில் உள்ள காசா பகுதியில் தற்போது போர் நிறுத்தம் நடைமுறையில் உள்ளது. இதை மீறி நேற்று முன்தினம் இஸ்ரேல் விமான தாக்குதல் நடத்தியது. இஸ்ரேல் - காசா எல்லைப் பகுதியில் இந்த தாக் குதல் நடந்தது. இதில் 3 பேர் பலியா னார்கள். இதில் இருவர் தாக்குதல் நடந்த இடத்திலேயே பலியானார்கள்.

மூன்றாமவர் காயம் அடைந்து ஆஸ்பத்திரியில் சேர்க்கப்புட்டார். அங்கு சிகிச்சை பலன் இல்லாமல் பலியானார்.

மேலும் ஒருவர் காயத்துடன் சிகிச்சை பெற்று வருகிறார். எல்லைக்கு அப்பால் இஸ்ரேல் பகுதியில் ரோந்து வந்த இஸ்ரேல் வீரர் மீது பாலஸ்தீன தீவிரவாதிகள் ஏவுகணை தாக்குதல் நடத்தியதால் அவர்கள் மீது விமான தாக்குதல் நடத்தப்பட்டது என்று இஸ்ரேல் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விமான தாக்குதலை தொடர்ந்து தீவிரவாதிகள் தெற்கு இஸ்ரேல் மீது 3 ரொக் கெட்டுகளை வீசி தாக்குதல் நடத்தினார்கள். இதில் யாருக்கும் காயமோ, பொருட்சேதமோ எதுவும் ஏற்படவில்லை. (6)



சிவகாசி ஜேசீஸ் மெட்ரிக் பள்ளியில் நடந்த யோகாசன போட்டியில் மாணவன் தினேஷ் கண்ணாடி கிளாஸ் மீது யோகா செய்தார்.

# ஈராக்கில் கார் குண்டு தாக்குதலில் 10 பேர் பலி

(பக்தாத்)

ஈராக் நாட்டில் பக்தாத்துக்கு தெற்கே ஹில்லாக் என்ற இடத்தில் மாட்டுச்சந்தையில் கார்குண்டு தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 10 பேர் பலியானார்கள். 32 பேர் காயம் அடைந்தனர். பலியானவர்கள் அனைவரும் மாட்டை விற்கவோ, வாங்கவோ வந்தவர்கள் ஆவார்கள்.

ஈராக்கில் கடந்த 18 மாதங்களில் வன்முறை குறைந்துள்ளது. ஆனால் கடந்த சில வாரங்களாக வன்முறை அதிகரித்து உள்ளது. (6)

# லாகூர் தாக்குதலில் ஈடுபட்ட பயங்கரவாதிகளை கட்டுப்படுத்த தவறிய பாதுகாப்பு படையினர்



## குற்றம் சாட்டுகிறார் முஷாரப்

(இஸ்லாமாபாத்)

லாகூர் தாக்குதலில் ஈடுபட்ட பயங்கர வாதிகளை கட்டுப்படுத்த தவறிய பாதுகாப்பு படை வீரர்களை குற்றம்சாட்டியுள்ளார் பாகிஸ்தானின் முன்னாள் அதிபர் முஷாரப். லாகூரில் இலங்கை கிரிக்கெட் வீரர்கள் மீது பயங்கரவாதிகள் கொடூர தாக்குதல் நடத்தினர்.

இதில் 6 பொலீசார் உட்பட எட்டு பேர் கொல்லப்பட்டனர். 7 இலங்கை வீரர்கள் படுகாயமடைந்தனர். பயங்கரவாதிகளின் தாக்குதலுக்கு பாகிஸ்தானின் முன்னாள் அதிபர் முஷாரப் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது,

கிரிகெட் வீரர்களுக்கென பிரத்யேகமாக சிறப்பு பாதுகாப்பு படையினர் நியமிக்கப் பட்டிருந்தனர். நெருக்கடியான சூழ்நிலையில் அவர்களது செயற்பாடுகள் படுமோசமாக இருந்தது. தாக்குதலில் ஈடுபட்ட பயங்கரவாதிகளை அவர்கள் உடனடியாக சுட்டிருக்க வேண்டும்.

ஆனால் அவர்களுக்கு சுடத் தெரியவில்லை என்றே கூற வேண்டும். எதிரில் நின்று தாக்குதல் செய்யும் ஒருவரை மூன்று நிமிடங்களுக்குள் சுட்டு வீழ்த்துவதே பாதுகாப்பு படையினரின் வேலை. இதுமாதிரியான பயிற்சியே சிறப்பு பாதுகாப்புபடையினருக்கு தேவை.


தாக்குதல் நடந்த இடத்தில் பொதுமக்களும் நின்றிருந்தனர். அவர்கள் தங்களால் முடிந்தவரை பயங்கரவாதிகள் மீது தாக்குதல் நடத்தியிருக்கலாம்.

தாக்குதல் நடந்த சமயத்தில் யாரேனும் கார் வைத்திருந்தீர்கள் என்றால், உடனடியாக சாமர்த்தியமாக செயல்பட்டு பயங்கர வாதிகளின் மேல் காரை ஏற்றியிருக்கலாம்.

அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் ஆயுதம் எதுவும் வைத்திருப்பார்கள் என்றால், பயங்கரவாதிகள் மீது தாக்குதல் நடத்தியிருக்கலாம்.

பயங்கரவாதத்தை ஒழிப்பதில் பொது மக்களின் முயற்சியும் தேவை. பாகிஸ்தான் அரசு தற்போது இக்கட்டான நிலையை எட்டியுள்ளது. பாகிஸ்தான் கிரிக்கெட் கிட்டத்தட்ட அழியும் தருவாயில் உள்ளது. இனி எந்த நாட்டவரும் பாகிஸ்தான் வந்து விளையாடுவது சந்தேகம் தான். இத்தகைய சூழ்நி லையை மாற்ற பாகிஸ்தான் அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (6)

# நான் நிரந்தர ஓய்வுபெற வேண்டுமென்ற ஜெயலலிதாவின் கனவு பலிக்காது



## முதல்வர் கருணாநிதி தெரிவிப்பு

(சென்னை)

நான் நிரந்தர ஓய்வு பெற நினைப்பதும் அதன் காரணமாக ஆட்சிக்கு வரலாம் என அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதா கனவு காண்பதும் நடக்கவே நடக்காது என்று முதல்வர் கருணாநிதி திட்டவட்டமாக கூறியுள்ளார்.

அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதே கருணாநிதிக்கும், தமிழகத்துக்கும் நல்லது என்று ஜெயலலிதா கடந்த புதன்கிழமை கூறியிருந்தார்.

அதற்கு பதிலளித்து, முதல்வர் கரு ணாநிதி நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கை:

"இடையிடையே ஓய்வு எடுத்துக் கொண்டு உழைத்திடுக" என்று உற்றார், உறவினர்கள், நண்பர்கள், மருத்துவர்கள் என்னை வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

13 ஆவது வயதில் இருந்து இன்று 85 ஆவது வயது வரையில் எழுதுகிறேன், எழுதுகிறேன் - எழுதிக்கொண்டே இருக்கிறேன். களைப்பில்லாமல் கடுமையான அரசியல் களப்பணிபுரிந்து, சட்டப் பேரவை பொன் விழா கொண்டாடி உள்ளேன்.

ஏழை, நடுத்தர மக்களுக்கான திட்டங்களாக, கண்ணொளித் திட்டம் தொடங்கி, பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம், கைரிக்ஷா ஒழிப்புத் திட்டம் என பல்வேறு திட்டங்களை கடைக்கோடி மனிதர்களுக்கான திட்டங்களை நிறைவேற்றியுள்ளேன்.

தமிழகப் பண்பாட்டுச் சின்னங்களாக வள்ளுவர் கோட்டம், குமரி முனையில் வள்ளுவர் சிலை, தமிழ் கட்டாயப் பாட மொழியான அறிவிப்பு என பல்வேறு செயல்களை மேற்கொண்டதோடு, இந்திய தேசிய விடுதலை வீரர்களை நினைவு கூரும் திட்டங்கள், பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்கள், அடித்தட்டு மக்களுக்கான நல்வாழ்வுத் திட்டங்கள் என பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

நடக்கவே நடக்காது ... இப்படிபட்டியலிட முடியாத அளவுக்கு இத்தனை சாதனைகளையும் ஏற்றுக்கொண்ட கொள்கைகளின் வன்மையாலும், எண்ணத்தின் செயல் பாட்டினாலும் நிறைவேற்றி வருகிறேன்.

இவையெல்லாம், இன்று நான் என் சாதனைகளுக்குச் சான்றுகளாக தமிழகத்தில் விட்டுச் செல்வதென்றால், அந்த ஓய்வு பற்றி எனக்கு உற்சாகம் தான்.

எனினும், இத்தனை சாதனைகளையும் அழிக்கத் துடிக்கும் ஒரு பெண்மணியிடம் தமிழகத்தை விட்டுவிட்டு, நான் நிரந்தர ஓய்வு பெறுவதா என்று தான் ஏங்குகிறேன்.

நான் நிரந்தர ஓய்வு பெற நினைப்பதும், அதன் காரணமாக அவர் ஆட்சிக்கு வரலாம் என கனவு காண்பதும் நடக்கவே நடக்காது என்றார். (6)

# மகாத்மா காந்தியின் உடமைகளை ஏலத்தில் வாங்கினார் தொழிலதிபர் மல்லையா

தேசத் தந்தை மகாத்மா காந்தி பயன்படுத்திய 5 பொருட்களை, இந்தியத் தொழிலதிபர் விஜய் மல்லையா 18 லட்சம் டொலருக்கு ஏலத்தில் எடுத்துள்ளார்.

நியூயோர்க்கில் ஏன்டிகுவோரம் என்ற ஏல நிறுவனம், கலிபோர்னியாவைச் சேர்ந்த ஜேம்ஸ் ஓடிஸ் என்பவரிடம் இருந்த காந்தியின் 5 பொருட்களை ஏலம் விட்டது. இந்த ஏலத்தில் இந்தியத் தொழிலதிபர் விஜய் மல்லையா சார்பில் டோனி பேடி ஏலத்தில் கலந்து கொண்டார்.

மகாத்மா காந்தி பயன்படுத்திய கடிகாரம், மூக்கு கண்ணாடி, தட்டு, பேழை, ஒரு ஜோடி காலணி உள்ளிட்ட 5 பொருட்களையும் மொத்தம் 18 லட்சம் டொலருக்கு டோனி பேடி ஏலத்தில் எடுத்தார்.

இதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய டோனி பேடி, ஏலம் விடப்பட்ட காந்தியின் பொருட்களை விஜய் மல்லையா வாங்கியதன் மூலம் தேசத்தந்தையின் பொருட்கள் மீண்டும் நாட்டிற்கே கிடைத்துள்ளது. இவற்றை இந்திய அரசுக்கு பரிசாக வழங்க மல்லையா திட்டமிட்டுள்ளார்.

இன்னும் 2 வாரங்களில் காந்தியின் பொருட்களை ஏன்டிகுவோரம் ஏல நிறுவனம் மல்லையாவிடம் அளித்து விடும் என்பதால் விரைவில் அவை இந்தியாவுக்கு கொண்டு வரப்படும். இதனால் இந்திய மக்கள் பெரு மகிழ்ச்சியடைவார்கள் என தாம் நம்புவதாகக் கூறினார்.



முன்னதாக காந்தியின் பொருட்களை ஏலம் விடுவதை நிறுத்த வேண்டுமானால் இந்திய அரசு பாதுகாப்பிற்காக செலவிடும் தொகையை குறைத்துக் கொண்டு, ஏழைகளின் நலனுக்காக ஒதுக்கும் நிதியை அதிகரிக்க வேண்டும் என அமெரிக்காவைச் சேர்ந்த ஜேம்ஸ் ஓடிஸ் இந்திய அரசுக்கு நிபந்தனை விதித்தமை குறிப்பிடத்தக்கது. (6)

# மண்புழு வளர்ப்பும் அனுகூலங்களும் 4

### மண்புழு வளர்ப்புக்கு உகந்த சூழலியல் காரணிகள்


சூழலியல் காரணிகளின் தேவை துல்லியமான பார்வையில் மண்புழு இனங்களுடன் வேறுபட்டாலும் பொதுவாக நோக்குகையில் காற்றோட்டம், ஈரப்பதன், வெப்பநிலை போன்றவற்றின் தேவை எல்லா இனங்களுக்கும் ஏறத்தாழ சமனாகும். அதாவது பொருத்தமான சூழலியல் காரணிகளின் கிடைப்பனவு இயல்பான மண்புழு வளர்ச்சியையும் வினைத்திறனான மண்புழு உர உற்பத்தியினையும் உறுதி செய்கிறது.



தாராளமான காற்றோட்டம், மண்புழு உர உற்பத்திக்கு அவசியமானதாகும். ஏனெனில் காற்றோட்டம் அற்ற நிலையில் தோன்றும். காற்றின்றி வாழ் பக்றீரியாக்கள் மண்புழுக்களால் விரும்பப்படுவதில்லை. எனவே காற்றோட்டத்தினளவை அதிகரிப்பதற்கு மண்புழு படுக்கையை 2 அல்லது 3 வாரத்துக்கு ஒரு தடவை நன்கு கிளறி விடுதல் வேண்டும். அத்துடன் வைக்கோல் போன்ற காற்றோட்டத்தை அதிகரிக்கக் கூடிய பொருட்களை கழிவுகளுடன் சேர்த்து இடல் வேண்டும்.

ஈரப்பதனை கருதுமிடத்து மண்புழு படுக்கை அதிகம் உலர்ந்தாகவோ அல்லது அதிகம் ஈரலிப்பானதாகவோ இருத்தலாகாது. அதிகமான உலர்நிலை மண்புழுவின் உடற்றொழிற்பாடுகளைப் பாதிக்கும். அதே போல் அதிகமான ஈரலிப்பான தன்மை மண்புழுக்களால் விரும்பப்படுவதில்லை. எனவே 12-30% ஈரப்பதனே விரும்பப்படுகிறது. ஏனெனில் இந்த ஈரப்பதனிலேயே வினைத்திறனான முறையில் நுண்ணங்கிகளின் தொழிற்பாடும், மண்புழு உர உற்பத்தியும் நடைபெறுகிறது. எனவே இந்த ஈரப்பதனை பேணுவதற்கு தொகுதியானது நேரடி சூரிய ஒளியோ அல்லது மழை நீரோ படுவதனை தவிர்த்தல் வேண்டும்.

அத்தடன் உலர்வதனைத் தடுப்பதற்கு வைக்கோலால் மூடுவது சிறந்தது. தொகுதி சரியானளவு ஈரப்பதனைக் கொண்டுள்ளதா என உறுதிப்படுத்துவதற்கு ஒரு கைப்பிடி மண்புழு உரத்தை எடுத்து அதனை ஐந்து விரல்களாலும் நன்கு அழுத்தும் போது ஓரிரு நீர்த்துளிகள் மட்டுமே கையிலிருந்து வெளியேறுமாயின் தொகுதியானது போதியளவு நீர்ப்பிடிப்பைக் கொண்டுள்ளது எனலாம். மாறாக நீரானது விரலிடுக்கினூடாக சீறிப் பாயுமாயின் அதிகளவான ஈரப்பதனையும் மற்றும் நீர்த்துளிகள் வெளியேறாது விடின் தேவையைவிடக் குறைந்தளவான ஈரப்பதனையும் கொண்டிருக்கிறது எனக் கருதப்படும். ஈரப்பதனைத் துணிவதற்கு மூங்கில் தடியும் சில இடங்களில் பயன்படுத்தப் படுகிறது.





வெப்ப நிலையைக் கருதுகையில் 20-30°C ஆனது பொருத்தமானதாகும். இருப்பினும் மண் புழுக்கள் மிகக் குறைந்த வெப்ப நிலையிலிருந்து 48°C வரையான வெப்ப நிலை வரை உயிர் வாழக்கூடியவை. வெப்ப நிலை 10°C யை விட குறையும் போது உணவு உள்ளெடுக்கும் வீதம் குறைவடையும் அத்துடன் மண்புழு உர ஆக்கமும் பாதிக்கப்படும். வெப்பநிலை 4-5°C யிற்கு குறைவடையும் போது முட்டையிடும் (கொக்கூன்) அளவும் குறைவடைகிறது. அதே போல மண்புழு படுக்கையின் வெப்பநிலை அதிகரிக்கும் போது அதிலிருந்து விலகுவதற்காக மண்புழுக்கள் படுக்கையிலிருந்து வெளியேற எத்தணிக்கும். முடியாத கட்டத்தில் சில சமயங்களில் இறப்புகள் கூட சம்பவிக்கும். வெப்பநிலை குறிப்பிட்ட அளவை விட அதிகரிக்கும் போது மண் புழுக்களின் உடலிலிருந்து அவற்றின் உடற் திரவம் வெளியேற ஆரம்பிக்கும்.

**இதையும் கேளுங்க!**

1 கிலோ கிராம் உயிர் நிறையுடைய மண் புழுக்களால் 24 மணி நேரத்துள் சுமார் 4-5 கிலோ கிராம் சேதனக் கழிவுகளை மண்புழு உரமாக மாற்ற முடியும்.

சூழலில் மண்புழுக்கள் காணப்படுகிற இடத்தை அடிப்படையாகக் கொண்டு அவை பிரதானமாக 3 வகையாகப் பிரிக்கப்படுகின்றன அவையாவன.



**Eisenia foetida**
**இன மண்புழுவின் தோற்றம்**

#### உக்கல்களில் வாழ்வன (Epigeic)

Eisenia Foetida, Eudrillns engineae போன்ற இன மண்புழுக்கள் இவற்றுள் அடங்கும். இவை மண்ணின் மேற்பரப்பிலுள்ள சருகுகளை மட்டும் உட்கொள்வதால் Phytophagous இவ்வகையான புழுக்களால் மண்ணின் கட்டமைப்பில் நேரடியாக எவ்வித மாற்றமும் ஏற்படுவதில்லை.

#### மண்ணின் மேற்படையில் வாழ்வன (anecics)

இவை மண்ணின் மேற்படையில் தொழிற்படுவதால் தாவர உக்கல்களை மண் படையுடன் கலப்பதில் உதவுகின்றன. அதாவது இவை மண்ணையும், தாவரங்களையும் உட்கொள்ள வல்லன. (Geophyto phagous)

#### மண்ணின் உட்பகுதியில் வாழ்வன (Endogeic)

இவை எப்பொழுதும் மண்ணின் கீழ் காணப்படுவதால் மண்ணைப் பண்படுத்துவதற்கு இவ்வகையான மண்புழுக்கள் பயன்படுத்தப்படுகின்றன. பொதுவாக எமது வீட்டுத் தோட்டங்களில் காணப்படும் Lampitomauritii ஆனது இவ்வகையான மண்ணைத் துளைத்து செல்லும் இயல்புடையதாகும். இவ்வகையான மண்புழுக்கள் மண்ணைப் பண்படுத்தலில் உதவுமேயொழிய மண்புழு உர ஆக்கத்தில் வினைத்திறன் குறைந்தவையாகும். (தொடரும்)

**த. கஜந்தன்**
விவசாய உயிரியல் (சிறப்பு)
தகவல் தொடர்பு மையம்
விவசாய பீடம், யாழ் பல்கலைக்கழகம்

# இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 6-I

*"விவசாயிகளுக்கான வாழ்நாள் கல்வி" - "விவசாயத்தில் தகவல் தொழில் நுட்பத்தினுதவியுடன் மறுமலர்ச்சி"*

*எம் இனிய உறவுகளே!*

எங்களூர் விவசாய மெல்லாம் வயது போனவர்களுடனேயே அஸ்தமனமாகப் போகுது! விவசாயம் செய்து என்ன பலன்? விளைந்ததைக் கூட அறவிலைக்கு விற்க வேண்டியிருக்கிறதே!வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல இடையில் வரும் தரகர்களினால் விளைந்ததை நல்ல விலைக்கு விற்க முடியாது விவசாயிகள் அவதியுறுகிறார்கள்.

இன்னொரு பக்கத்தில் பயிர்ச் செய்கைக்கு தேவையான உள்ளீடுகளின் விலை உயர்வும், பல்கிப் பெருகிவரும் பீடைகள், கலைகளினால் பயிர்களில் ஏற்படுத்தப் படும் சேதமும் விவசாயிகளை உலுக்கி விடுகின்றன. போதாக்குறைக்கு இயற்கையின் சீற்றமும் இவர்களை நோகடிக்கச் செய்துள்ளது. வாடா தம்பி விவசாயம் செய்ய. விவசாயம் என்றதும் முகஞ்சுழிப்பதேனடா? உயர்ந்து வளர்ந்த நீ இன்னும் ஏன் மனிதனாக வளராமல் இருக்கிறாய்?

**விவசாயி என்றால் இளக்காரமா?**


விவசாயம் வேண்டாமென்று டவுசரும் சேட்டும் போட்டு கணனி படிக்க போகும் உனக்கு நல்ல தொரு செய்தி இது. என்னடா தம்பி! விவசாயத்திற்கும் கணனிக்கும் என்ன சம்பந்தம் என்றா நினைக்கிறாய்?

இந்தா வருகிறது கணனி தொழில் நுட்பம். என்ன பார்க்கிறாய்? கணனி தொழில்நுட்பம் இலகு தொழில்நுட்பமாய் இணையத்தளத்தில் வீடு தேடி வருகின்றது. உனக்காகத்தான். ஓடாதே! ஓடி ஓடி எதைச் சாதித்தாய்? வாடும் மக்களுக்கு உண்ண உணவு செய்தல் தெய்வ செயலன்றோ!தகவல் தொழில்நுட்பம் வழிகள் பல கொண்டு வருகின்றது வரலாறு படைக்க. இன்னும் தெரிய வேண்டுமா? நீயும் வாசித்து மற்றையவருக்கும் சொல்லி வை. 2015 ஆம் ஆண்டு வரை திட்டமிட்ட செயற்பாடு ஒன்று உலகளாவிய ரீதியில் செயலுருப் பெற்று வருகின்றது.

பசுமைப் புரட்சிக்கு இன்னொரு அத்திவாரம் ஆழமாக இடப்படுகின்றது.

*'காமன் வெல்த்தினூடான கல்வி'*

*'Commonwealth of Learning'* (COL) என்பது உலகிலுள்ள காமன்வெல்த் நாடுகளனைத்தும் கூட்டாக இணைந்து உருவாக்கியுள்ள இலவசக் கல்வியை தகவல் தொழில் நுட்பத்தினூடாக உலகளாவிய ரீதியில் அனைவருக்கும் வழங்குவதற்காக உருவாக்கப்பட்டுள்ள ஸ்தாபனம் ஆகும். கனடாவை தலைமையமாகக் கொண்டு இந்நிறுவனம் இயங்குகின்றது. உலகிலே வாழ்வாதாரத்தைத் தேடி ஓடிக்




கொண்டிருக்கும் வறிய மக்களுக்காக, விவசாயிகளுக்காக, தொழிலாளர்களுக்காக அவர்களின் ஜீவனோபாயத்தின் வழிகாட்டியாக இயங்கும் ஸ்தாபனம் இது.

2015 ஆம் ஆண்டில் அனைத்து விவசாயப் பெருமக்களும் தகவல் தொழில் நுட்பத்தினூடாக இணைக்கப் பட்டு வேளாண்மையில் ஏற்படும் பிரச்சினைகளை அதற்கான தீர்வுகளை, வேளாண்மையை விருத்தி செய்வதற்கான வழிகளை பெறுவதற்கான திட்டம் நிபுணர்களின் ஆலோசனைகளை, விரைந்து, இருந்த இடத்திலிருந்து கணனியைத் தட்டிவிட்டு இலவசமாக பெற்றுக் கொள்வதற்கான செயல் திட்டம் விவசாயிகளுக்கான வாழ்நாள் கல்வி {Life Long farmers (L3)} என்னும் கருப்பொருள் கொண்டு உருவாக்கப்படுகின்றது.

தமிழில், ஆங்கிலத்தில், சிங்களத்தில் இன்னும் எந்த மொழியில் வேண்டுமோ அந்த மொழியில் கிடைக்க வழி செய்யப் படுகின்றது. இங்கே விக்கி எடியூகேற்றர் (www.wikieducator.org) என்ற இணையத்தளத்தில் அனைத்து இலவச பாடங்களை திறனுள்ளவர்கள் இணைக்கவும், திருத்தவும், எடுக்கவும் முடியும். சங்கேத குறியீடுகள் ஏதுமில்லை. எதுவும் எவருக்கும் சொந்தமில்லை. எதுவிதமாகவும் உரிமை கோர முடியாது. பொதுவுடைமையின் அத்திவாரம் இது.

**கனவு நனவாகப் போகின்றது!**

கந்தப்பருக்கு ஒரு கனவு. 'தம்பி இது நிசம்தானோ?' கொம்பியூட்டர் பார்த்து விவசாயம் செய்யலாமோ? விவசாயம் செய்யிறவருக்கு எதுக்கு கொம்பியூட்டர்? அவரின் அவதி விளங்குகின்றது. சண் டை ஓய சங்கதிகளெல்லாம் ஓடி வரும், வெளி நாடு சென்றவர் காசை முதலீடு செய்ய ஓடி வருவார். திட்டங்களுடன் தயாராக இருக்க வேண்டும்.உலக விவசாயிகளை ஒன்றாக இணைக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை. கட்டைப் பிராயிலிருந்து கலிபோர்னியாவில் கமஞ் செய்யும் விவசாயியுடன் கூட்டுச் சேரலாம். சும்மா தரக் குறைவாக நினைக் காதையும். காளான் குடில்களுக்குள் இருந்து வெள்ளத்தில் நீச்சலடித்தாலும் விவசாயம் என்றும் இளக்காரமாகாது என்ற அவருக்கு சொல்லி வை. உணவு செய்யும் தொழிலை



**கலாநிதி கு.மிகுந்தன்**
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

உசாதீனம் செய்யக் கூடுமோ?

***இலங்கையில்...***

எமது நாட்டில் இத்திட்டம் தேசிய மட்டத்திலான திட்டமாக உருமாறி செயலுறுப் பெற்றிருக்கின்றது. இலங்கைக்கான ஆலோசகராக இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தரும், நுண்ணங்கியியலாளரும், தொலை தூர கல்வித்திட்டத்தின் (DEMP) தர நிர்ணய ஆலோசகராகவும் மற்றும் பணியாளருமாகவுள்ள பேராசிரியர் உமா குமாரசுவாமி அவர்களின் அயராத முயற்சியினால் 'வாழ்நாள் விவசாயிகள்' திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வழமையான வகுப்பறை – கல்வி கற் பித்தல் (conventional teaching) என்ற பல்கலைக்கழக கல்வி முறையில் இருந்து முற்றிலும் மாறுபட்டு தொலை தூர கல்வி முறை போல விவசாயிகளுக்கு கல்வி கற்பித்தல் என்றதொரு சிறந்த கல்வி முறையாக செயலுருப் பெற்று வருகின்றது. (தொடரும்)

அநாதைகளின் தலைமேல்தான் நாவிதர்கள் கற்றுக் கொள்கிறார்கள்.

~ அரேபியா

வலம்புரி

## ஈழத்தமிழர் விவகாரம் தமிழகத்தில் அரசியல் இலாபம்

பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்குச் சீவன் போகிறது என்பது தமிழ்ப் பழமொழி. இந்தத் தமிழ்ப் பழமொழியின் அடிப்படையில் ஈழத் தமிழர் விவகாரம் உள்ளது.

அதாவது வன்னியில் தமிழ் மக்கள் மிக மோசமான பேரவலத்தைச் சந்தித்து வருகின்றனர். எனினும் இதுவரை அவர்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கை எவராலும் எடுக்கப் படவில்லை.

இந்நிலையில் ஈழத்தமிழருக்காக அன்றும், இன்றும், என்றும் குரல்கொடுத்துவரும் வை. கோபாலசாமி, பழ.நெடுமாறன், தொல்.திருமாவளவன், வீரமணி, சீமான் போன்றவர்கள் தொடர்ந்தும் ஈழத்தமிழருக்காக ஆத்மார்த்தமாகக் குரல் கொடுத்து வருகின்றனர்.

ஈழத்தமிழினத்துக்கு குரல் கொடுத்தமைக்காக வை.கோபாலசாமி சிறை சென்ற வரலாறும் உண்டு.

இப்போதும் கைதும் சிறையும் நடந்தாலும் வைகோ, பழ.நெடுமாறன், சீமான் போன்றவர்கள் தங்கள் இலட்சியத்தில் இருந்து இம்மியும் தளரவில்லை.

ஆனால் தமிழகத்தின் சில அரசியல்வாதிகள் தங்கள் அரசியல் நலனுக்காக ஈழத்தமிழர் விடயத்தைக் கையாளுகின்றனர். இது மிகப்பெரும் துரதிர்ஷ்டமாகும்.

தமிழினம் அழிந்து கொண்டிருக்கும்போது அதனை அரசியல் இலாபமாக ஆக்கிக் கொள்வோரை என்னவென்று அழைப்பது?

ஈழத்தமிழருக்காக உண்ணாவிரதம் இருக்கப் போவதாக செல்வி ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

தமிழகத்தின் முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா உண்ணா விரதம் இருப்பது வரவேற்கத்தக்க விடயம்.

ஆனால், தமிழகத்தில் ஈழத்தமிழருக்கான ஆதரவை அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து வெளிப்படுத்தியிருக்குமாயின், இந்திய மத்திய அரசு நிச்சயம் இலங்கை விவகாரத்தில் தலையிட்டு இருக்கும்.


இதனைவிடுத்து முன்னுக்குப் பின் முரண்பாடான கருத்துக்களை வெளியிட்டுக் கொண்டு, காலம்கடந்து உண்ணாநோன்பிருப்பது அர்த்தமற்றது.

ஒருபுறத்தில் ஈழத்தமிழருக்கு என்றும் எதிரான சுப்பிரமணிய சுவாமியுடன் கூட்டு, மறுபுறத்தில் தேர்தலைக் கருத்தில் கொண்ட உண்ணாவிரதம் என்ற போலித்தனமான செயற்பாடுகள் நடந்தேறுகின்றன.

இவையெல்லாம் நாளும் மரணமாகிக் கொண்டிருக்கும் வன்னி மக்களுக்கு எந்த விமோசனத்தையும் தராது என்பது உறுதி.

# ஊடகங்கள் மீதான அச்சுறுத்தல் குறித்து ஆராய சுயாதீன ஆணைக்குழு அமைக்கப்படல் வேண்டும்

## எதிர்க்கட்சித்தலைவர் தெரிவிப்பு



(கொழும்பு)

ஊடகங்கள் மீதான அச்சுறுத்தல்கள் மற்றும் ஊடக வியலாளர்களுக்கு எதிரானஅடக்கு முறைகளை ஆராய்வதற்கு ஐவர் அடங்கிய சுயாதீன ஆணைக்குழு அமைக்கப் படவேண்டும். மேல்மாகாண சபைத் தேர்தலில் ஐ.தே. கட்சியை பலப்படுத்துவதன் மூலமே எதிர் காலத்தில் ஊடகச் சுதந்திரத்தை உறுதிப்படுத்த முடியும் என்று எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மேல் மாகாண சபைத் தேர்தலில்ஐ.தே.கட்சியில் போட்டியிடும் வேட்பாளர் ரோசி சேன நாயக்கவையும், மொஹமட் அக்ரமையும் ஆதரித்து பம்பலப்பிட்டியில் கடந்த புதன் கிழமை இடம்பெற்ற அமைப்பாளர் கூட்டத்தில் உரையாற்றும் போதே ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியதாவது.

ஊடகங்களுக்கு எதிராக அரசாங்கம் செயற்படவில்லையானால் ஊடக அடக்கு முறைகளுக்கு எதிரான விடயங்களை விசாரணை செய்வதற்காக சுயாதீன ஆணைக்குழுவை அமைப்பதற்கு ஆதரவு வழங்க வேண்டும். இதனை பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்.

இந்த ஆணைக் குழுவில் அரச தரப்பைச் சார்ந்த இருவர் எதிர்க்கட்சியை சார்ந்த இருவர் மற்றும் ஊடக அமைப்புக்களில் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும்.

இதனைப் பாராளுமன்றத்தில் முன்வைத்து சட்ட மூலமாக்க வேண்டும். அதற்கு ஐ.தே.கட்சி பூரண ஆதரவை வழங்கும்.

ஜனாதிபதிக்கு எதி ராகவோ அரசாங்கத் திற்கு எதிராகவோ விமர் சனங்களை ஊடகங்களில் வெளியிட முடியாது. அதனை மீறி விமர்சித்தால் ஊடகவியலாளர்கள் கடத்தப் படுகிறார்கள், அல்லது கொலை செய்யப்படுகிறார்கள், தாக்குதலுக்குள்ளாகின்றார்கள்.

இவைகளையும் மீறிஊடக நிறுவனங்கள் தீ வைத்துக் கொளுத்தப்படுகின்றன அண்மையில் பத்திரிகை ஆசிரியரொருவர் கொலை செய்யப்பட்டார். ஆனால் விசாரணைகளும் இல்லை. குற்றவாளிகள்கைது செய்யப்படவுமில்லை. அரசாங்கம் அதிகாரத்தை கைப்பற்றி 40 மாதங்களே கடந்துள்ளன. ஆனால் இது வரையில் 54ஊடகவியலாளர்கள் காணாமல் போயுள்ளனர், அல்லது கடத்தப்பட்டுள்ளனர், சிலர் கொல்லப்பட்டுள்ளனர். எனவே, தொடர்ந்தும் இந்தஅடக்கு முறைக்கு இடமளிக்க முடியாது என்றார். (ஓ-6)

## தடைப்பட்டிருந்த நீர் விநியோகம் சீரானது

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேச ங்களுக்கான நீர் விநியோகம் நேற்று வெள்ளிக்கிழமை மாலை முதல் வழமைக்கு திரும்பியது.

கோண்டாவில் பஸ் நிலையத்தில் இருந்து பிரதான தாங்கிக்கு நீரேற்றும் 12அங்குல நீரேற்றுக்குழாய் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலைக்கு முன்பாக உடைந்த மையால் வியாழக்கிழமை காலை முதல் நீர் விநியோகம் தடைப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

அதிகாரிகள், பொருத்துநர்கள், தொழிலாளிகள் உட்பட 30 பேரைக் கொண்ட குழு மேற்படி திருத்த வேலைகளை தொடர்ந்து இரவு பகலாக மேற்கொண்டு வெள்ளிக் கிழமை காலை 8.00 மணிக்கு வேலைகளை நிறைவு செய்து வெள்ளிக்கிழஙம மாலை மீண்டும் குடிநீர் விநியோகம் சீர் செய்யப் பட்டது. (ஓ)

## திருமறைக் கலாமன்றத்தின் இறுவட்டு இன்று வெளியீடு

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தினால் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படும் பாடல் இறுவட்டுக் களின் வரிசையில் 'சாந்தி' என்னும் புதிய பாடல் இறுவட்டு இன்று மாலை 3.30 மணிக்கு திருமறைக்கலாமன்றத்தின் கலைத் தூது கலையகத்தில் வெளியிட்டு வைக்கப் படவுள்ளது.

திருமறைக்கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமியும் சிறப்பு விருந்தினராக வேலணை பிரதேச செயலாளர் மு.நந்த கோபாலனும் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள். இறுவட்டுக்கான மதிப்பீட்டுரையை எழுத்தாளர் செ.யோசப்பாலா வழங்குவார்.

மண்ணின் வாசம் வீசும் இப்பாடல்களுக்கான இசையமைப்பை இளைய இசையமைப்பாளர் கு.அற்புதன் மேற்கொண்டுள்ளார். (சு-51)

## விண்ணப்பம்கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சுற்றுப் புறச் சூழல் சான்றிதழ் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவங்களை யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் 13 ஆம்திகதிக்கு முன்பதாக விண்ணப்பிக்க வேண்டும் எனவும் இக் கற்கை நெறி கொழும்பு பிராந்திய நிலையத்தில் மாத்திரமே நடைபெறும் எனவும் இணைப்பாளர் தெரிவித்துள்ளளார். (ஓ-7)

## கண்டெடுக்கப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை பழைய வெளி நோயாளர் பிரிவுக்கு முன்னால் ஒரு தொகைப் பணம் கண்டெடுக்கப்பட்டு போதனா வைத்தியசாலைக் கணக்காளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பணத்தை தவறவிட்டவர்கள் உரிய ஆதாரங்களைக் காட்டி பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப் படுகின்றனர். (ஓ)

❖ ❖ ❖

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை சிறுவர் விடுதியில் சிறிய மோதிரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு போதனா வைத்திய சாலைக் கணக்காளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தவற விட்டவர்கள் உரிய ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (ஓ)

❖ ❖ ❖

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு 5 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மரியதாஸ் நாகேஸ்வரி என்பவருடைய விசேட அடையாள அட்டையும் (091400 1044) கைப்பையும் யாழ் போதனா வைத்தியசாலைக்கு அண்மையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

உரியவர் தகுந்த ஆதாரத்தைச் சமர்ப்பித்து எஸ். தெட்சணாமூர்த்தி 68, பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில், எனும் முகவரியில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்படுகின்றார். (ஓ-6)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செயலக நலன்புரிச் சங்கம் நடாத்தும் மாதாந்த கருத்தரங்கு எதிர்வரும்10 ஆம்திகதி செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் தலைவர் மனுவல் வித்தியானந்த நேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையை யாழ்.மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் வழங்குவார்.

இதைத் தொடர்ந்து ''நலமான வாழ்விற்கு இதமான இதயம்'' என்னும் விடயத்தில் இருதய சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி பி.லக்ஸ்மன் கருத்துரை வழங்க வுள்ளார். (ஓ-4)

## சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

## சுதந்திரனாக இரு



தீமைகளுக்கும் துன்பங்களுக்கும் காரணம் என்று இன்று நாம் நினைக்கும் பொருட்களையெல்லாம் நாம் சமநோக்குப் பெற்ற பிற சிரிப்புக்கு உரியவை ஆகிவிடும். இதையே முத்தி, சுதந்திரம் என்று வேதாந்தம் கூறுகிறது. சமத்துவ உணர்வும் சமநோக்கும் நம்மில் மேன் மேலும் மிகும்போது நாம் முக்தியை நெருங்குகிறோம் என்பதற்கான அடையாளம் அது இன்பத்தையும் துன்பத்தையும், வெற்றியையும் தோல்வியையும் ஒன்றாகப் பார்க்கும் நிலை முதிர முதிர, மனம் முக்தி நிலையை நெருங்குகிறது என்பது பொருள்.

மனத்தைத் தன் விருப்பப்படி நரம்பு மையங்களுடன் இணைக்கவோ பிரிக்கவோ செய்வதில் வெற்றி பெறுபவன் பிரத்யாஹாரத்திலும் வெற்றி பெறுகிறான் பிரத்யாஹார்ரம் என்பது மனத்தின் பிடியிலிருந்து அதனை விடுத்து *உள்ளே குவித்தல்* ஆகும். இதைச் செய்ய முடிந்த பின்தான் நாம் உண்மையில் நற்குணம் என்பதை பெறுகிறோம், அதன் பின்தான் முத்திப்பாதையில் ஒருநீண்ட அடியெடுத்து வைக்கிறோம். அதற்கு முன் நாம் வெறும் எந்திரங்களே.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு
# வெளிவாரிப் பரீட்சைகள் - 2008

1. வணிக முதற் தேர்வு - 2007 மற்றும் 2008
2. வணிகமாணி - பகுதி - I- 2007
3. வணிகமாணி - பகுதி - II -2006 & 2007
4. வணிகமாணி - பகுதி -III - 2005& 2006

மேற்படி பரீட்சைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் வவுனியா வளாகத்திலும் மிக விரைவில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பரீட்சைக்கு தோற்ற விரும்பும் பரீட்சார்த்திகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா100/= இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

பரீட்சைகள் நடைபெறும் திகதி விபரங்கள் விரைவில் பத்திரிகைகளில் விளம்பரப் படுத்தப்படும்.

தபால் மூலம் விண்ணப்பப்படிவத்தினைப் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 100/= க்கான காசுக் கட்டளை / தபாற் கட்டளையுடன் சுயமுகவரியிடப்பட்ட ரூபா20/= பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28X20 செ.மீ. அளவுடைய தபால் உறையுடன் **உதவிப் பதிவாளர், வெளிவாரிப்பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

பரீட்சார்த்திகளிடமிருந்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 15.04.2009 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

## வெளிநிலை தேர்வுநாடிகளின் பதிவேடுகள்

★ கலை முதற் தேர்வு - கல்வியாண்டு 2006/2007 மற்றும் 2007/2008
★ வணிக முதற் தேர்வு - கல்வியாண்டு ,, ,,
★ கலைமாணி பகுதி - I - கல்வியாண்டு ,, ,,
★ நுண்கலைமாணி (சங்கீதம்/நாட்டியம்) ,, ,,

மேற்படி கற்கை நெறிகளுக்கு வெளிநிலைத் தேர்வுநாடிகளாக பதிவு செய்தவர்கள் தங்களுக்குரிய பதிவேட்டினை 11.03.2009 புதன்கிழமை முதல் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் பெற்றுக்கொள்ளலாம்.

**குறிப்பு :** பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தினதும், கல்வித் தகமைச் சான்றிதழினதும் (க.பொ.த. உயர்தரம்) மூலப்பிரதிகளை சமர்ப்பிக்காதோர் அவற்றை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**பதில் பதிவாளர்**
**06.03.2009**

(C/2181)

# விண்ணப்பங் கோரல்

(கொழும்பு)

சுகாதார திணைக்களத்தில் இலங்கை விஞ்ஞான சேவையின் வகுப்பு II தரம் II இற்கான பதவிவெற்றிடங்களை நிரப்புவதற்கான திறந்த போட்டிப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வெற்றிடமாகவுள்ள பதவிகள் வருமாறு,

மருந்துப் பகுப்பாய்வாளர் (இரசாயனம்), மருந்துப் பகுப்பாய்வாளர் (உயிரியல் விஞ்ஞானம்), உயிரியல் இரசாயனவியலாளர் , பௌதீக விஞ்ஞானவியலாளர், பூச்சியியலாளர் , ஆராய்ச்சி அலுவலர் (இயற்கை உற்பத்திகள்), ஆராய்ச்சி அலுவலர் (பூச்சியியல்), ஆராய்ச்சி அலுவலர் (தடுப்பு மருந்து மற்றும் உற்பத்திகள்), ஆராய்ச்சி அலுவலர் (நுண்ணுயிரியல்- பக்றீரியாவியல், வைரஸ்வியல்), ஆராய்ச்சி அலுவலர் (உயிரியல் இரசாயனம்).

விண்ணப்பப்படிவங்களை ஏப்ரல் மாதம் 3ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவே கிடைக்கக்கூடிய வகையில் *பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம் , பெலவத்தை, பத்திரமுல்லை* என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை 2009.03.06 ஆம் திகதிய வர்த்தமானியிலோ அல்லது வலம்புரிக்காரியாலயத்திலோ பார்வையிடலாம்.

(ஓ-6)

# சிறுவிளம்பரம்

## வேலைக்கு ஆள் தேவை

கணக்காளர், விற்பனையாளர் பதவிகளுக்கு ஆள் தேவை. சிறந்த கணக்கியல் அறிவும், முன் அனுபவமும் தகைமைகளாக வேண்டப்படுகின்றன. தகைமையுள்ள இருபாலாரும் நேரில் வரவும்.

*M/S ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்*
இல.212,214, கே.கே. எஸ். வீதி,
யாழ்ப் பாணம். (2180)

## தவறிவிட்டது

''நிழல்'' சமூக சேவை அமைப்பின் "பனர்" Banner" அண்மையில் தவறவிடப்பட்டுள்ளது. தகவல் தெரிந்தோர் தொடர்பு கொள்ளவும்.

தொ.பே. 077 4041904
077 9906483
0602219055
(2379)

## ஒன்றுகூடல் நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டது

கோப்பாய் கல்விக்கோட்ட அதிபர்களுக்கான ஒன்றுகூடலும் பிரிவுபசார வைபவமும் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருந்தது. தவிர்க்க முடியாத காரணத்தால் இந்நிகழ்வு ஒத்திப்போடப்பட்டு எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளதாக கோப்பாய் கல்விக்கோட்ட அதிகாரி அறிவித்துள்ளார். (ஓ-4)

# POST OF STORE KEEPER

Applications are invitated from those who have passed 3 subjects in G.C.E A/L to fill the post of store keeper. Preference will he given to those with at least two years experience in store keeping. Salary negotiable depending on qualification and experience.

Application with Bio data may be forwarded to reach the under signed on or before 15.03.2009

*Human Resource Manager,*
*Euroville Engineers & Constructors (Pvt) Ltd,*
*866,Point Pedro Road, Nallur,*
*Jaffna.*

(C/2178)

# Hatton National Bank

Hatton National Bank plc (PQ82)

The Banker
Bank of the Year 2006
Sri Lanka

# அடகுப் பொருட்கள் ஏல விற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம் , சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, மானிப்பாய் ஆகிய கிளைகளில் 15.01.2008இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் 14.03.2009 சனிக்கிழமை காலை 9 மணிக்கு இல.212, 214, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ். கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

**உங்களின் பெறுமதி மிக்க பொருட்களை உடனே மீட்க முடியாவிட்டால்...**

◆ கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா 500) செலுத்தி

*அல்லது*

◆ தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருட்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக்கொள்ளலாம்.

**ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.**

(C/2182)

**ஹற்றன் நஷனல் வங்கி**




(C/2173)

# பாகிஸ்தான் வீரர்களின் பஸ் தாமதமாக வந்தது ஏன்?

## முரளிதரன் கேள்வி எழுப்புகிறார்



(கொழும்பு)

பாகிஸ்தான் அரசு சரியான முறையில் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து தரவில்லை. தவிர நாங்கள் சென்ற பஸ் மீது தாக்குதல் நடத்துவது பற்றி ...ன் கூட்டியே இராணுவத்திற்கு தெரிந்திருக்க அதிக வாய்ப்பு உள்ளது என்கிறார் இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன்.

பாகிஸ்தானில் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாட இலங்கை அணி சென்றது. கராச்சியில் நடந்த முதல் டெஸ்ட் சமனிலையில் முடிபடைந்தது.லாகூரில் இரண்டாவது டெஸ்ட் நடந்தது.

இப் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டத்தில் பங்கேற்க இலங்கை வீரர்கள் பஸ்ஸில் சென்றனர். அப்போது அவர்கள் சென்ற பஸ் மீது 12பேர்கொண்ட பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதலில் இலங்கை அணியின் தலைவர் ஜெயவர்த்தனா, சமரவீர, மென் டிஸ், உள்ளிட்ட எட்டு பேர் காயம் அடைந் தனர்.

இத்தாக்குதல் குறித்து முரளிதரன் கூறியதாவது; பாகிஸ்தான் பாதுகாப்பில் மெத்தனப் போக்கை கடைப்பிடித்துள்ளது.

இதனால்தான் தாக்குதலுக்கு உள்ளானோம். தாக்குதல் நடக்கும் போது எங்கள்பஸ்ஸில்உள்ளபொலிஸார் யாரிடமும் துப்பாக்கி இல்லை. தவிர பொலிஸார் எவரும் பயங்கரவாதிகளை நோக்கி சுட்டதாக தெரியவில்லை. எங்களை நாங்களே பாதுகாத்துக்கொள்ளவேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டோம்.

இது சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளது.

**திட்டமிட்ட சதி**

இத்தாக்குதல் திட்டமிட்ட சதி என்பதற்கு நிறைய ஆதாரங்கள் உள்ளன. நாங்கள் சென்ற பஸ் காலை 8.30 மணிக்கு மைதானத்துக்கு புறப்பட்டது.

ஆனால் பாகிஸ்தான் வீரர்கள் வந்த பஸ் 8.35 மணிக்கு புறப்பட்டது. பாதுகாப்புப் படையினருக்கு தாக்குதல் குறித்து முன்பே தகவல் தெரிந்திருக்க வாய்ப்புகள் உள்ளது.

இதனால்தான் பஸ்ஸின் நேரம் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. பயங்கரவாதிகள் சாரதியை கொல்ல முதலில் குறிவைத்தனர். அதற்கு பின் இரண்டு பக்கங்களிலிருந்தும் 39 ரவைகள் சுட்டனர்.

தரங்க பரணவித்தான,திலான் சமரவீர இருவருக்கும் பலத்த காயம் ஏற்பட்டது. பரணவித்தான மார்பை குண்டு துளைத்து விட்டது.

சமரவீர வுக்கு குண்டுத் துகள் காலில் உரசிச் சென்றது. பரணவிதானவுக்கு மார் பிலிருந்து இரத்தம் வழிந்தது.

அவர் இறந்து விட்டார் என்றே நான் நினைத்தேன். ஆனால் உண்மையில் சமர வீரவின் காயத்திலிருந்தே இரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

சங்கக்காரவுக்கு தோள் பகுதியில் இருந்து இரத்தம் வந்தது. பஸ்ஸில் எங்கு பார்த்தாலும் இரத்த வெள்ள மாக காட்சி அளித்தது. அது பார்க்கவே பயங்கரமாக இருந்தது. இவ்வாறு முரளிதரன் தெரிவித்தார்.

(5)

# பெண்கள் உலக கிண்ணம் ஆஸியில் இன்று ஆரம்பம்

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) சார்பில் 9ஆவது பெண்கள் உலககோப்பை கிரிக்கெட் தொடர் அவுஸ்திரேலியாவில் இன்று ஆரம்பமாகிறது.

அவுஸ்திரேலியாவின் பவுரலில் இன்று(மார்ச் 7) நடக்கும் முதல் போட்டியில் இந்தியா,பாகிஸ்தான், பெண்கள் அணிகள் மோதுகின்றன.

கான்பராவில் நடக்கும் மற்றொரு போட்டியில் இங்கிலாந்து பெண்கள் அணி, இலங்கை பெண்கள் கிரிக்கெட் அணியை எதிர் கொள்கிறது.

முன்னதாக நடந்த எட்டு உலக கோப்பை கிரிக்கெட் தொடரில் அவுஸ்திரேலிய அணி5 முறையும் இங்கிலாந்து அணி இரண்டு முறையும், நியூசிலாந்து அணி ஒரு முறையும் சம்பியனானமை குறிப்பிடத்தக்கது.

# இரண்டாவது ஒரு நாள் போட்டி மழையால் இரத்தானது

(வெலிங்டன்)

இந்திய-நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி 28.4 ஓவர்கள் மாத்திரமே வீசப்பட்ட நிலையில் மழை காரணமாக கைவிடப்பட்டது.

இதன் மூலம் இந்திய அணி 5 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் 1:0 என்ற கணக்கில் தொடர்ந்து முன்னிலை பெற்றது.

வெலிங்டனில் நேற்று நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் போட்டியில் நாணயசுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி சச்சின்,சேவாக்கின் அதிரடி ஆட்டத்தின் மூலம் சிறப்பான ஆரம்பத்தை பெற்றது. இதன் போது இருவரும் இணைந்து ஆரம்ப விக்கெட்டுக் காக 12.3 ஓவர்களில் 76 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்து கொண்டனர்.

இந்நிலையில் சேவாக் நடுவரின் தவறான தீர்ப்பின் காரணமாக பரிதாபமாக அரங்கு திரும்பினார். பட்லர் வீசியபந்து சேவாக்கின் துடுப்பில் பட்டு விக்கெட் காப்பாள ராக செயற்பட்ட மெக்லாஷிடம் சென்றது.

இதனை தொடர்ந்து சேவாக் ஆட்டமிழந்ததாக விக்கெட் காப்பாளர் முறையிட நடுவர் தவறான தீர்ப்பு அளித்தார். இதன் போது சேவாக் 36 பந்துகளில் (9 பவுண்டரிகளும், ஒரு சிக்ஸரும் அடங்கலாக) 54 ஓட்டங்களை பெற்றிருந்தார். இந்த போட்டியில் நியூசிலாந்து அணியின் நிரந்தர விக்கெட் காப்பாளரான பிரென்டன் மக்கலம் துடுப்பாட்ட வீரராக மாத் திரமே அணியில் இணைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சச்சினுடன் இணைந்த காம்பீரும் சிறப்பாக செயற்பட்டார். எனினும் இந்திய அணி 19 ஓவர்கள் முடிவில் ஒரு விக்கெட்டை இழந்து 130 ஓட்டங்களை பெற்றிருந்த போது மழை குறுக்கிட்டது. இதனால் அரை மணி நேரம் தாமதமான போட்டி மீண்டும் ஆரம்பமான போது 44 ஓவர்களுக்கு வரையறுக்கப்பட்டது.

இதன்படி தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முக்கிய இரண்டு விக்கெட்டுக்களை பறிகொடுத்தது சிறப்பாக ஆடிவந்த சச்சின் டெண்டுல்கர் 69 பந்துகளுக்கு (7 பவுண்டரிகளும், ஒரு சிக்ஸரும் அடங்கலாக) 61 ஓட்டங்களை பெற்ற நிலையில் விட்டோரியின் பந்துக்கு ஆட்டமிழந்தார். மறுமுனையில் ஆடிவந்த காம்பீர் 36 பந்துகளுக்கு 30 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஓ பிறினின் பந்துக்கு வெளியேறினார்.

இதனிடையே இந்திய அணி 24 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 151 ஓட்டங்களை பெற்ற நிலையில் மீண்டும் மழை குறுக்கிட்டது. இதனை தொடர்ந்து ஆரம்பமான போட்டி அணிக்கு 34 ஓவர்களாக வரையறுக்கப்பட்டது. எனினும் இந்திய அணிக்கு மேலும் 4.4 ஓவர்களுக்கு மாத்திரமே முகம் கொடுக்க முடிந்தது. இதனை தொடர்ந்து மீண்டும் மழை குறுக்கிட்டது.

இதன் போது இந்திய அணி 28.4 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 188 ஓட்டங்களை பெற்றிருந்தது.


அணித்தலைவர் தோனி 23 ஓட்டங்களுடனும் சுரேஷ் ரெய்னா 13 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். இதில் யுவராஜ் சிங் வந்த வேகத்தில் பூஜ்யத்துக்கு ஆட்டமிழந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் போட்டியில் தொடர்ந்தும் மழை குறுக்கிடவே இந்திய அணியின் ஆட்டத்தை நிறுத்த நடுவர்கள் தீர்மானித்தனர். அதே வேளை டக்வேர்த் லூயிஸ் முறையில் நியூசிலாந்து அணிக்கு 28 ஓவர்களில் 218 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

எனினும் தொடர்ந்து மழை பெய்த தால் நியூசிலாந்து அணியால் வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாட முடியாமல் போனது.

(5)

# சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்... 26





இந்நிலையில் மூன்றாவது ஒருநாள் போட்டி 1994 ஆகஸ்ட் 7ஆம் திகதி கொழும்பு சிங்கள விளை யாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களையிழந்து 237 ஓட்டங்களை எடுத்தது.

இதில் முரளிதரன் 8 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்ட மற்ற ஓவர் உட்பட 53 ஓட்டங்களைக் கொடுத்து விக்கெட் எதனையும் கைப்பற்றாமல் ஏமாற்றினார்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 49 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 218 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 19 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. இதில் முரளிதரன் ஒரு ஓட்டத்தை மாத்திரமெடுத்து ஆட்டமிழந்தார்.

மூன்று ஒருநாள் போட்டிகள் நிறைவடைந்த நிலையில் இரு அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் 1994ஆம் ஆண்டு ஆகஸ்ட் 9ஆம் திகதிமுதல் 13ஆம் திகதிவரை கொழும்பு பி.சரவணமுத்து விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்ததாடிய பாகிஸ்தான் அணி முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 390 ஓட்டங்களை எடுத்தது.

இதில் முரளிதரன் 36 ஓவர்கள் பந்துவீசி 6 ஓட்ட மற்ற ஓவர்கள் உட்பட 123 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டை மாத்திரம் சாய்த்து சோபிக்கத் தவறினார்.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 226 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது. இதில் முரளிதரன் ஓட்டமெதனையும் எடுக்காமல் ஆட்டமிழந்தார்.


பாலா

தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 4 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 318 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தி இலங்கை அணிக்கு வெற்றிஇலக்காக 483 ஓட்டங்களை நிர்ணயித்தது. இதில் முரளிதரன் 11 ஓவர்கள் பந்துவீசி 42 ஓட்டங்களை எடுத்து விக்கெட் எதனையும் வீழ்த்தாமல் ஏமாற்றி னார்.

இந்நிலையில் 483 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 181 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்து 301 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இதில் முரளிதரன் 13 பந்துகளில் (2பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 20 ஓட்டங்களை ஆட்டமிழக் காமல் எடுத்து கலக்கினார்.

*(பயணிக்கும்)*

# எண் விளையாட்டு-31




***போட்டிவிதிகள்:*** மேலிருந்து கீழ் தொடங்கும் வெள்ளைக் கட்டங்ளில் நிரப்பப்படும் எண்களின் கூட்டுத் தொகை, கட்டங்களின் மேல்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ள எ ண்ணுக்கு சமமாக வர வேண்டும்.

இடமிருந்து வலமாக செல்லும் கட்டங்களுக்கும் இதே விதிதான். அக்கட்டங்களுக்கான கூட்டுத் தொகை இடப்புறம் கொடுக்கப்பட்டுள்ளது.

1 முதல் 9 வரையான எண்களை பயன்படுத்த வேண்டும். ஆனால் ஒரு வரிசையில் பயன்படுத்திய எண் திரும்ப வரக்கூடாது.

*நேற்றைய பகுதிக்கான விடை*



மாநகர சபை, யாழ்ப்பாணம்.



## கொழும்புத் துறைமுகம்...

பிரதிநிதிகள் நலன்புரி முகாம்களுக்குச் சென்று பார்வையிட்டுள்ளனர். அவர்கள் இடம்பெயர்ந்து வரும் மக்களின் நலன்கருதி அரசு மேற்கொண்டுவரும் சேவைகள் தொடர்பில் திருப்தியடைந்துள்ளனர்.

அதேபோன்று வவுனியாவுக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த ஐ.நாவின் விசேட பிரதிநிதி ஜோன் ஹோம்ஸ் தனது அறிக்கையில், அரசின் செயற்பாடு தொடர்பில் திருப்தி அடைவதாகக் குறிப்பிட்டிருந்தார். ஐ.நா. மற்றும் அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் பல மனிதாபிமான ஒத்துழைப்புகளை எமக்கு வழங்கியுள்ளன.

சர்வதேச அமைப்புகள் பல நிதி உதவிகளையும் அளித்துள்ளன. அவை அரச மற்றும் அரச் சார்பற்ற நிறுவனங்களூடாகக் கிடைக்கப் பெற்றுள்ளன. அதற்காக அந் நிறுவனங்களுக்கு நாம் நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம். அந்நிதியின் ஒரு தொகை இடம்பெயர்ந்த மக்களின் நலன் கருதி பயன்படுத்தப்படுகின்றது. வடக்கில் அண்மைக்காலமாக பல பாரிய ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன. அவை அனைத்தும் கொழும்புத்துறை முகத்தினூடாகவே பெறப்பட்டுள்ளன.

அவை எவ்வாறு விடுதலைப் புலிகளைச் சென்றடைந்தன என்பது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பு இன்று உத்தியோகபூர்வமாக அரசிடம் ஆயுதங்களை ஒப்படைக்கவுள்ளது. இந்த அமைப்பினரும் விடுதலைப் புலிகள் இறுதி நிலையை அடைந்துள்ளதை ஒப்புக் கொண்டுள்ளனர்.

அவர்கள் தமது பாதுகாப்புக் கருதியே ஆயுதங்களைத் தாம் வைத்திருப்பதாக முன்னர் தெரிவித்தனர். இன்று அரசாங்கம் அவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கியதன் காரணமாக அவர்கள் இந்த முடிபுக்கு வந்துள்ளனர் என்றார். (ச-5)

## புதுமாத்தளன்...

இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட பருத்தித்துறை நீதிவான் கே.அரியநாயகம் பிரேதப் பரிசோதனையின் பின்னர் சடலங்களை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

இத் தாக்குதலில் காயமடைந்த எஸ். ஜெனிஸ்ரன் (வயது20) ஜெ.மேரிகுயிற்றா (வயது37), ஜெ.நியூட்டன் (வயது01) ஆகியோர் படுகாயமடைந்து மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(ச-52,49,14)

## யுத்தப்...

பொதுமக்களின் பாதுகாப்பு தொடர்பில் வழங்கியுள்ள உத்தர வாதத்தை வரவேற்பதாகவும் அவர் இதன்போது கூறியுள்ளார்.

யுத்தத்தில் ஈடுபட்டுவரும் சகல தரப்பினரும் பொதுமக்களின் பாதுகாப்பை முதன்நிலைப்படுத்தி செயற்பட வேண்டுமெனவும் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார். யுத்தம் காரணமாக உருவாகியுள்ள அடக்கு முறை, மனித உரிமை மீறல்கள், தண்டனையிலிருந்து தப்பித்தல் போன்ற சகல பிரச்சினைகள் குறித்தும் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் எனவும் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் நவநீதம் பிள்ளை சுட்டிக்காட்டியுள்ளார். (ச-5)

## பூபாலசிங்கம் புத்தக....

தொடர்பாகவே சிறீதரசிங் கைது செய்யப்பட்டதாக உறவினர்கள் பிரதியமைச்சர் இராதாகிருஷ்ணனிடம் முறையிட்டுள்ளனர்.

ஆனந்த விகடன் வார இதழை யாழ்ப்பாணத்திலுள்ள பூபாலசிங்கம் புத்தகசாலைக்கும் மற்றும் விற்பனை நிலையங்களுக்கும் அனுப்புவதற்கான பொதியை இரத்மலானை விமான நிலையத்திற்கு அனுப்பியபோது அதனை சோதனையிட்ட பொலிஸார் குறித்த விடயங்கள் தொடர்பான கட்டுரைகள் மற்றும் படங்கள் இருப்பதை கண்டு பணியாளர்களிடம் விசாரணை நடத்தினர்.

அதனையடுத்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை இறக்கு மதியாளரான சிறீதரசிங்கின் வெள்ளவத்தை வீட்டுக்குச் சென்ற பயங்கரவாத தடுப்பு காவல்துறையினர் அவரை கைது செய்து கல்கிசை காவல் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இவர் கைது செய்யப்பட்டமை தொடர்பாக உறவினர்கள் பிரதி அமைச்சர் இராதாகிருஷ்ணனிடம் முறையிட்டுள்ளனர். ஆனந்த விகடன் வார இதழை பூபாலசிங்கம் புத்தகசாலை கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் நாட்டில் இருந்து இறக்குமதி செய்து விற்பனை செய்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## புதன், வியாழக்கிழமைகளில்...

முன்தினம் அதிகாலை 1.30 மணிக்கும் பிற்பகல் 12 மணிக்கும் இடையில் தொடர்ச்சியாக இத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வன்னித் தகவல்கள் தெரிவித்தன.

இதில் கைக்குழந்தைகள் உட்பட 25 பொது மக்கள் உயிரிழந்துள்ளதுடன் 123க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். அதிகாலை வேளை நடத்தப்பட்ட தாக்குதலினால் தூக்கத்தில் இருந்த மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் காயமடைந்த நிலையில் பெருமளவிலான மக்கள் இருளில் பெரும் அவலப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்களை மேற்கோள்காட்டி இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இத் தாக்குதலில் உயிரிழந்த பா.சஜந்தினி (வயது 7), சி.சாரூபன் (வயது 2), சோ.நடராசா (வயது 45) ஆகியோரின் பெயர் விபரங்கள் வெளியாகியுள்ளதாகவும், 23 சடலங்கள் மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள இரட்டைவாய்க்கால் பகுதியை நோக்கி கடந்த 4ஆம் திகதி புதன்கிழமை இரவு 7.45 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட ஆட்லறி எறிகணை, பல்குழல் வெடிகணை, மோட்டார் மற்றும் பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதில் 10 பேர் உயிரிழந்துள்ளதுடன் 62 பேர் காயமடைந்துள்ளனர்.

மு.கிருஸ்ணகுமார் (வயது 56), உ.மாணிக்கம் (வயது 49), இ.இராசமணி (வயது 55), இ.அருந்தவராசா (வயது 40), ஜெ.தமிழ்வாணி (ஒரு வயது), இ.ஞானமணி, ச.சாரங்கன் (வயது 18) ஆகியோர் உயிரிழந்துள்ளனர்.

ஏனையோரின் பெயர் விபரங்கள் வெளிவரவில்லை. (ச-5)


லாவண்யா

பல், மூக்குக்கண்ணாடி அகம்

552, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

கிளை
யாழ் வீதி, நெல்லியடி
(பொலிஸ் நிலையம் முன்பாக)

வடமராட்சி வாடிக்கையாளரின் நலன் கருதி எமது நெல்லியடி கிளை தினமும் திறக்கப்பட உள்ளது. மேலும் மூக்குக் கண்ணாடிகள், செயற்கைப் பற்கள், மிதப்பு பற்களுக்கான நிரந்தர கிளிப் அனைத்து விலைகளும் குறைக்கப்பட்டுள்ளன.

நெல்லியடியில் பார்வையிடும் நேரம்: காலை 9 - 2 மணிவரை

உரிமையாளர்
DR. றெஜி சொலமன்

(C-2183) T.P. வீடு: 222 5569, கடை: 222 9053



யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனம்

வட்டுக்கோட்டை

புதிய பயிற்சிநெறிகள் ஆரம்பம்- March 2009

பின்வரும் பாடநெறிகளுக்கு உடனடியாக விண்ணப்பிக்கவும்

அரச "Tertiary and Vocational Education Commission" ஆல் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நெறிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1. குளிர்சாதனப்பெட்டி (Fridge), வளி சீராக்கி (Air-Conditioner) திருத்துதலும் பொருத்துதலும்.
2. மோட்டார் வாகன தொழில் நுட்பம் (Motor Mechanic)
3. மின் இணைப்பு அமைத்தல் (Electrical Wiring)
4. லேத் வெல்டிங் பிற்றிங் பயிற்சிநெறி (Mechanical Craftsman Practice)

(காலம்: 1 வருடம்)

5. ரேடியோ, T.V பழுதுபார்த்தல்.
6. மின்னியலும் இலத்திரனியலும் (Electrical & Electronics)

(காலம்: 6 மாதங்கள்)

- குறுகியகாலப் பயிற்சிநெறிகள்
- குறைந்த கட்டணம்! அதுவும் தவணை முறையில் செலுத்தும் வசதி!!
- நிறைவான செய்முறைப் பயிற்சிகளுடன் கூடிய நன்கு வடிவமைக்கப்பட்ட கற்கை நெறிகள்.
- மேலதிகமாகக் கணினி, ஆங்கிலம் ஆகிய துறைகளிலும் அனைவர்க்கும் பயிற்சி.
- சிறந்த நூலகம், விளையாட்டுத்துறை விடுதி போன்ற மேலதிக வசதிகள்.
- 784,785,789 இலக்க பேருந்து, சிற்றூர்தி மார்க்கங்களில் வந்து செல்லக்கூடிய அமைவு.

சுயதொழில் ஆரம்பிக்க ஆர்வமுள்ளோருக்கும், மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் பெறச் செல்ல எண்ணியுள்ளோருக்கும், மேற்படிப்பைத் தொடர முடியாமற்போனோருக்கும் இது அரிய சந்தர்ப்பம்!

விண்ணப்பப் படிவங்களைக் கீழ்க்கண்ட முகவரியில், நேரடியாகவோ, தபால் மூலமாகவோ பெற்று, விண்ணப்பிக்கலாம்.

இயக்குநர்,
யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனம்,
வட்டுக்கோட்டை.
T.P.: 021 222 8275 / 0602213139 (C-2176)


## கொமாண்டோ படைப்பிரிவை...

இலங்கைப் பிரச்சினை தொடர்பாக அமெரிக்காவின் தற்போதைய நிலை குறித்து அமெரிக்க அரசின் தெற்காசிய மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான துணைச் செயலர் ரிச்சட் பௌச்சர் நேற்று தொலைபேசி மூலமான மாநாடு ஒன்றின் போது பி.பி.சிக்கு கருத்துரை வழங்கினார்.

அதன்போதே அவர் மேற்கொண்டவாறு வலியுறுத்தி உள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையில் மோதல் பிரதேசங்களில் சிக்கியுள்ள மக்களின் நிலைமை குறித்து ஆராய்ந்து அங்கு அமெரிக்காவின் பசுபிக் கொமாண்டோ படைப் பிரிவை அனுப்பி அங்கு போர் பகுதியில் சிக்கியுள்ள மக்களை வெளியேற்றுவது தொடர்பான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து அடையாளம் காண சிலரை அனுப்பியிருந்தோம்.

இந்த பொது மக்களுக்குஎன்ன செய்யமுடியுமோ அதனைச் செய்ய முயல்வோம். ஆனால் ஒரு அனுமதியளிக்கும் சூழல் வரும் வரை நம்மால் மக்களை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகள் போன்றவற்றைச் செய்யமுடியாது. எனவே இந்த இருதரப்புகளும் மக்களை அச்சுறுத்தாமல் அவர்களை வெளியேற அனுமதிக்க வேண்டும்.

மோதல் நடக்கும் பகுதிகளில் உள்ள மக்கள் அங்கிருந்து வெளியேற விடுதலைப் புலிகள் உட்பட அனைவரும் அனுமதிக்க வேண்டும்.

பராக் ஒபாமா பதவியேற்ற பின்னர் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற கொள்கையில் மாற்றம் வரும் என்று கருதப்படும் நிலையில் அமெரிக்காவின் இலங்கைக் கொள்கையில் மாற்றம் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதா என பி.பி.சி கேட்டதற்கு பதிலளித்த ரிச்சட் பௌச்சர், பராக் ஒபாமா, கிளாரி கிளின்டன் ஆகியோர் கூறிய கருத்துப்படி பயங்கரவாதப் பிரச்சினை குறித்து கையாளுவதில் ஒரு முழுமையான உறுதிப்பாடு இருக்கிறது.

இதைக் கையாள்வதில் எம்மிடமுள்ள அனைத்து வழிமுறைகளையும் பயன்படுத்துவோம். அதாவது இராணுவம், சுகாதாரம், மேம்பட்ட அரச நிர்வாகம், மேம்பட்ட இராஜதந்திர வழிமுறைகள் போன்றவற்றைப் பயன்படுத்துவோம். எனவே இது ஒரு முழுமையான உறுதிப்பாட்டுடன் கூடிய அணுகுமுறையாக இருக்கும்.

இலங்கையைப் பொறுத்தவரை இந்தப் பிரச்சினையை நாங்கள் பல அம்சங்களினூடாகவும் அணுகிவருகின்றோம். தமிழ் மக்களுக்கு அனைத்து வாய்ப்புகளும் தரப்பட வேண்டும் எனக்கூறுகின்றோம்.

தமிழ் மக்களுக்கு மரியாதை தரப்படவேண்டும். அவர்களுக்கென்று இந்தத்தீவில் ஸ்திரமான ஆழமான அரசியல் அதிகாரம் இருக்கவேண்டுமென வலியுறுத்தி வருகின்றோம்.

அவை நாங்கள் தொடர்ந்து வலியுறுத்திவரும் இலக்குகளாக இருக்கின்றன. அந்த இலட்சியத்தை வழங்குவது முக்கியமானது. ஆனால் தமிழர்களுக்குரிய மரியாதை என்பது அவர்கள் போர் பிரதேசத்தில் சிக்கியிருப்பது தவிர்க்கப்படவேண்டும் என்றும் பொருள்படும் என்பதை நினைவுகூர விரும்புகின்றேன் என்றார்.

விடுதலைப்புலிகள் மக்களை போர் பிரதேசத்தில் சிக்கவைப்பதன் மூலம் அவர்களது அவஸ்தைகளை அதிகரிக்கவே செய்கிறார்கள்.

எனவே விடுதலைப்புலிகள் தமிழ் மக்களை இந்தப் போர் பிரதேசத்தில் இருந்து வெளியேற உடனடியாக அனுமதிக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார். (ச-14)


Diploma in English
- Spoken with Grammar.
- Phonetics Practices.
- Computer Based Practices
- Practice Exercises.
- Spoken Practices.
- Letter Writing.
- Listening..

புதிய பிரிவுகள் ஆரம்பம் 09.03.2009 08.00AM

மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் நேரில்,
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS Supported By UNDP/JRRP
www.mcsitacademy.com


## மரண அறிவித்தல்

### சரவணமுத்து சிவபாதசுந்தரம் (மண்டையன்)



மண்டைதீவு 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல.11/7, புகையிரத நிலைய வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து சிவபாதசுந்தரம் (மண்டையன்) 06.03.2009இல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து சின்னம்மா தம்பதியினரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் சின்னம்மா தம்பதியினரின் மருமகனும், ரதிதேவியின் அன்புக் கணவரும், சிதம்பரநாதன், குணமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும்,

உதயசேகர், உருத்திரா ஆகியோரின் சிறிய தகப்பனாரும் ரவிச்சந்திரன், உதயச்சந்திரன், மனோகரன், கல்யாணி, கீதாஞ்சலி ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற சண்முகராஜா மற்றும் கண்ணகை, வியாகரத்தினம், கெங்காதரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிருந்தா, டினோஜன், ஜீவிதா, கீர்த்தனா, திவ்யாணி, லஜீத், ஷஜிகா, ரஞ்சித், நிஷானிகா, பவீனா, கிசான், அக்ஷயன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தேவாலய வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலில் உள்ள அன்னாரின் சகோதரியின் இல்லத்தில் இன்று 07.03.2009 மாலை 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தேவாலய வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல்:
சகோதரர்கள்

(2384)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.03.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.